# ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்





ஜமீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீல்

# ஒவியத்திலிருந்து வெளியேறும் நிறம்

எதிர் பிரதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் பிரதிகள்

ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்

○கவிதைகள் ○ஆசிரியர்: ஜமீல், ○விலாசம்:124A, ஸ்டார் வீதி, பெரியநீலாவணை, மருதமுனை தொ.இல: 077 9689392 ○© அப்துல் றகுமான் அப்துல் ஜமீல் ○முதற் பதிப்பு: 2018 ○வெளியீடு: எதிர்பிரதிகள், தொ.இல: 0776751510, ○பக்க வடிவமைப்பு: எம்.ஏ.எம். அஸ்மி ○அட்டை வடிவமைப்பு: பிறவ்ஸ் முஹம்மட் ○அச்சுப் பதிப்பு: Excellent Print, சாய்ந்தமருது, ○பக்கங்கள்: 92 ○விலை: 350/= ○ISBN: 978-95578102-8

OVIYATHTHILIRUNTHU VELYERUM NIRAM

○Poems ○Author: Jameel, ○Address: 124A, Star Road, Periyaneelavanai, Maruthamunai T.P 077 9689392 ○© Abdul Rahuman Abdul Jameel ○First Edition: 2018 ○Publication: Ethir Pirathigal, Kinniya, T.P: 077 6751510 ○Layout Design: M.A.M. Asmy ○Cover Design: Firows Mohamed ○Printed By: Excellent Print, Sainthamaruthu ○Page: 92 ○Price: 350/- ○ISBN: 978-95578102-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்

ஜமீல்

இயற்பெயர் அப்துல் றகுமான் அப்துல் ஜமீல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் மருதமுனைக் கிராமத்தில் பிறந்தவர். 1993 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதைப் பெற்றவர். இவரது முதல் கவிதைப் பிரதி 'தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்' 2007 யாழ் இலக்கியப் பேரவையின் கவிஞர் அய்யாத்துரை விருதையும், தடாகம் இலக்கிய வட்டத்தின் கலைத்தீபம் விருதையும் பெற்றது. 'உடையக் காத்திருத்தல்' 2010 கொடகே சாகித்திய விருதின் இறுதிச் சுற்றில் சான்றிதழினைப் பெற்றதோடு 'காற்றை அழைத்துச் சென்றவர்கள்' 2014 ஆம் ஆண்டு கொடகே சாகித்திய விருதின் சான்றிதழையும், அரச சாகித்திய விருதின் சான்றிதழையும், பேனா கலை இலக்கியப் பேரவையின் விருதையும் பெற்றுக்கொண்டதோடு 'தாளில் பறக்கும் தும்பி' கவிதைப் பிரதி 2015 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது 2016 ஆம் ஆண்டுக்கான கவிஞர் வைரமுத்து அறக்கட்டளை விருதையும் பெற்றுக்கொண்டதோடு 'சிறகு முளைத்த ஊஞ்சல்' சிறுவர் பாடல் 2016, அவன் பையில் ஒழுகும் நதி 2017, ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம் 2018 ஆம் ஆண்டு வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

124 ஏ, ஸ்டார் வீதி
பெரியநீலாவணை - 01
மருதமுனை
இலங்கை

கைபேசி : 077 96 89 39 2
மின்னஞ்சல் : jameel2013a@gmail.com
முகநூல் : Abdul Jameel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி...

காலச்சுவடு, படிகள், புதுவிதி, தமிழர் தளம், எங்கள் தேசம்,
மீள்பார்வை, தினகரன், வீரகேசரி, தினக்குரல்,
இணையத்தளங்களான காற்றுவெளி, தட்டுங்கள், கொலுசு

ஏ.நஸ்புள்ளாஹ், அம்ரிதா ஏயெம், அலறி, அனார், அப்துல் ஆபித்,
பிறவ்ஸ் முஹம்மட், இமாம் அத்னான், நவாஸ் சௌபி
ஜே.பிரோஸ்கான், எம்.ரீ. சஜாத், எம்.ஏ.எம். அஸ்மி,
பத்திரிகையாளர் பி.எம்.எம்.ஏ. காதர், நசார் இஜாஸ்,
உமா வரதராஜன், ஏ.எம். குர்ஷித், டீன்கபூர்
உடன் பிறப்புக்களான ஜவாத், கபீழ், அன்சார், மலிக், எனது அன்புக்
குழந்தைகள் றபா அகமட், ஷெரீன், ஹயா, மைத்துனர்
ஜே.எம்.நௌபாஸ், விசேடமாக என் இணை நௌஸிலாவிற்கும்
அத்தோடு சொல்ல மறந்தவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது...

என் வாப்பாவிற்கு மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜமீலின் ஓவியத்தில்
## என்னை ஒரு நிறமாகப் பூசிப் பார்க்கிறேன்

ஏ.நஸ்புள்ளாஹ்

ஈழத்துக் கவிதைப்பரப்பில் புத்தாக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. முன்னையதை கூறாது கூறல் அல்லது பழமையிலிருந்து விடுபடுதல் என்கிற கொள்கையை முன்வைத்து தமக்குள்ளேயே இருக்கின்ற ஏதோ ஒரு செய்தியை பிரதியாளன் மொழி வடிவ மாற்றத்துடன் கருத்தியல் பிரதியாக தருவதை அவதானிக்க முடியும். இதன் உள்ளடக்கமே ஈழத்துக் கவிதைகள் மீதான பார்வை ஆச்சரியங்களைத் தருகின்றன

குறிப்பாக ஜமீல் கவிதைகள் ஒவ்வொன்றுக்குமிடையில் கவிதை மாற்ற மனோநிலை வெளிப்பாட்டை வாசிப்பாளன் கண்டு கொள்ள முடியும். கற்பனையிலிருந்து அதிகபட்சமாக விடுபடும் ஜமீல் கவிதைகள் இயற்கை, சமூகம், சிறுவர்கள் அவர்களது அரசியல் என பல்வேறுபட்ட உட்தளங்களுக்குள் சென்று ஒவ்வொரு கவிதையும் வெவ்வேறு விடயங்களை பேசுகின்றன, இந்த முனைப்புச் சாத்தியங்கள் ஜமீல் தன்னை கவிதை மனோநிலையில் சதா ஈடுபடுத்திக் கொள்வதன் நுண்ணிய பார்வை என கூறமுடியும்.

கற்பனையின்றி வாழ்வியல் வெளிப்பாடுகளை ஜமீல் கவிதைகள் முன் நகர்த்துவதனூடாக பௌதிக எல்லைகளுக்கு அப்பால் சென்று பிரதிகளை வாசிப்பாளனின் ஆவணங்களாக மாற்றுகின்றார் ஜமீல். இதற்கு பல காரணிகள் உண்டு. முக்கியமான அடையாளங்களாக, ஜமீல் கொள்ளும் பொருட்பரப்பு, அவருடைய புலன் கொள்ளும் கவனத்தின் பரப்பு. இன்னொன்று பிரதிகளில் வெளிப்படுத்தும் இயல்பு, மொழிதல், மொழி, சொற்கள் இவைகளைத் தாண்டி பிரதிகளுடன் வாசிப்பாளனை இணைக்கும் தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையின் அடையாளக் கவிஞர்கள் பலரின் கவிதைகளை நான் வாசித்த போது என்னை மெல்லிய உணர்வுளுடன் தன் கவிதை களுக்குள் அழைத்துப் போனவர் ஜமீல், இவரது கவிதைகள் நுட்பமும் ஆழமும் நம்மை வசியப்படுத்தும் மொழிதலைக் கொண்டுள்ளன. சொற்களின் உண்மையும் இவரது மனவெளிப்பாடும் நமது வரலாற்றின் அனுபவத் தொகுதியாக நம்முன் செல்வாக்கு செலுத்துகின்றன.

ஜமீல் வாழ்வனுபத்தின் மனத் தொகுதியினைச் சொல்வதோடு இயற்கை மீது இவருக்கிருக்கும் காதலையும் அதன் பிரியங்களையும் காட்சிப் படுத்துகிறார். இயல்பாகவே கவிதையணுக்கள் இவருக்குள் பிரவாகம் எடுப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

சிறுவர்களின் சூழல் அல்லது அவர்களின் வாழ்வியல் நிலைமைகளின் தாக்கம் தனிமனிதனுக்குள் அமர்ந்து கொள்ளும் சிக்கல்களென பல செய்திகளை ஜமீல் கவிதைகள் சொல்லி நிற்பதையும். இந்தப் பிரதிகளினூடாக அவர் கவிதைத் தளத்தில் தனது அகநிலை பதிவுகளின் மதிப்பீடுகளையும் சமகால சூழலியலையும் பாடுபொருள்ாக்குகிறார். ஜமீலின் கவிதைகளில் காலாசாரத்தின் இருப்பு குரலாக வெளிப்படுகின்றது. இது காலத்தின் சாட்சியாகவும் பதிவாகவும் வாசிப்பாளனின் மனசுள் குந்திக்கொள்கின்றது. வாழும் காலத்தில் வாழும் படைப்பாக மட்டுமன்றி ஜமீலின் கவிதைகள் எதிர்கால நம்பிக்கையின் பதிவாக கவித்துவங்களால் எல்லைகள் தாண்டி நிற்கின்றன.

வாழ்க்கை குறித்தான காலத்தின் நெருக்கடிகளை தன் மொழி வழியில் அடையாளப்படுத்துவதன் மூலம் சுலபமாகவே ஜமீல் நம் மனசுள் ஊடுருவுகிறார். அதிநவீனம், பிரமாண்டம் இவைகளைத் தாண்டி மாய மொழி, கனவுலகம் பற்றியதான உரையாடல்கள் தொடங்கும் ஒரு காலசூழலில் தனித்துவமான கவிதை மொழிதலில் கவிதையுலகில் பரந்து நிற்கிறார் ஜமீல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நி ற ங் க ள்


அறை முழுவதும் சொற்கள் 01
இடப்பெயர்வும் இடப்பெயரா நினைவுகளும் 02
சிறுவனின் இதழ்களில் ஊறிப் பெருக்கெடுக்கும் இனிப்பு 03
பறவைகள் வளர்ப்பவன் 04
எழுத்துக்கள் 05
தேநீர்க் கோப்பையில் நிரம்பி வழியும் நிலவு 06
வாழ்வின் பொருள் 07
மலராகிய பட்டாம் பூச்சி 08
எதுவும் நிகழலாம் 09
காற்றைத் திறந்துவிடும் மரங்கள் 10
ஓவியத்தின் நிழல் 11
வர்ணங்கள் உதிர்க்கும் பறவைகள் 12
மழையும் பொழுதினில் 13
அலைகளைத் திறந்துவிடும் கடல் 14
கொம்புகள் எதற்கு 15
முறிந்த சிறகுகள் 16
வாழ்வை எழுதும் தருணங்கள் 17
அப்பாவிடம் பகிரப்படா சிறுமியின் சொற்கள் 18
கீச்சிடும் ஓவியம் 19
பெருநாள் ஆடை 20
தலைப் பிறையின் ஒளியினிடை மலரும் பெருநாள் 21
பிரிந்துசென்ற வர்ணங்கள் 22
மழை 23
உறுத்தும் வார்த்தைகள் 24
எனது பாடலில் உறைந்திருக்கும் சொல் 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழாங்கற்களில் மலரும் விடுதலை 26
புதிரறியாக் கனவு 27
சாரமற்ற வாழ்க்கை 28
குழம்புதல் 29
மௌனம் சாதிக்கும் விதை 30
ஹயாவின் காவல் பொம்மை 31
பிரபஞ்ச மொழி 32
ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம் 33
உத்தரவென்பது 34
மனசின் இருளில் மின்மினிப் பூச்சிகளைப் பறக்கவிடுதல் 35
சூட்சுமங்கள் 36
பிரபஞ்ச ஓவியம் 37
குறுகும் இரவு 38
பறக்கும் முத்தம் 39
பனித்துளிகள் ரசிப்பதற்கு மட்டுமானதல்ல 40
மூங்கில் காடு 41
புத்தகம் 42
சிறகுகளுடன் பிறந்தவள் 43
பிரபஞ்சத்தின் ஒளியால் நிரம்பியிருப்பவன் 44
நிராகரித்தலென்பது 45
பறவைகளைத் திறந்துவிடும் மரங்கள் 46
சருகு 47
நிழலை அழைத்துவரல் 48
சொற்களைப் பரிசுத்தமாக்குதல் 49
அறைகளின் விடுதலை 50
பட்டாம் பூச்சி 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுப் பிராணி 52
இரவிடம் பேசுதல் 53
பிரிவின் நீட்சி 54
நான் சிறு காடு 55
இரக்கம் 56
கனவும் பன்றிகள் 57
இலையென உதிரும் மனசு 58
கடலைப் பரிசளித்தல் 59
நடுநிசி வாலாட்டிகள் 60
நானும் தனிமையும் 61
பூக்களற்ற வெளியைப் பாடுதல் 62
பொம்மைகள் வரைபவள் 63
இரவினை மொழிதல் 64
பட்டாம் பூச்சியின் வன்மம் 65
காத்திருத்தலில் தொலைதல் 66
சிறுவர்களின் மனதிலாடும் விழுதுகள் 67
மீன்களின் புத்தகம் 68
வாழ்வைத் தனிமையிடம் பங்கிடுதல் 69
புல்லாங்குழலால் பேசுபவள் 70
தவிர்க்கமுடியாத விடுபடுதல்கள் 71
புதிய இலைகளால் துளிர்த்தல் 72
தாளில் வரையப்பட்ட கனவு 73
வாழ்வை சமாளிக்கும் முத்தங்கள் 74
குழந்தைக்குள் குடை 75
சிறுமியின் இனிப்பை தின்று முடித்த காற்று 76
மஞ்சள் பூக்களில் மலரும் சிறுமியின் அன்றாட வாழ்வு 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறை முழுவதும் சொற்கள்

காலியாக இருந்த தாள்கள் மீது
தனக்கு மிகவும் விருப்பமான
சொற்கள் சிலதை பதிக்கிறாள் ஹயா
அறையின் இமைகளினூடாக
திருட்டுப் பூனையென நுழைந்த காற்று
தாள்களை உதறிவிடுகிறது
அதில் பாரமேற்றி வைக்கப்பட்டிருந்த
சொற்கள் அனைத்தும்
அறை முழுவதும் சிதறிக் கிடந்தன
அவ்வாறு விரவிக் கிடந்த சொற்களை
சேகரம் செய்து வாசித்துப் பார்க்கிறேன்
எல்லாச் சொற்களும் அழகாக
இருந்த அதே தருணம்
அனேக சொற்கள் பிழையாக இருந்தன
உடன் ஹயாவை அழைத்து
பிழையான சொற்களைச் சுட்டிக் காட்டினேன்
பயந்தொடுங்கி முழுசுகையில்
அவள் விழிகள் உருண்டுருண்டு பேசிய விதம்
எனக்குள் ஆயிரமாயிரம் சொற்களை உதிர்த்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்வும்
## இடப்பெயரா நினைவுகளும்

வைகறையைத் திறந்துவிடுகிறது இரவு
நீலம் பாரித்திருந்தது வானம்
பனியில் கொடுகிச் சிலிர்த்து நின்றன
சாலையோரத்து மரங்கள்
வழமைபோன்று சந்திக்கடை முன்றலில்
விரிந்து நிற்கும் நிழல் வாகையில்
கூடி நின்றன தோட்டிப் பறவைகள்
கடை திறப்பதற்கான சாத்தியப்பாடாக
இடைக் காலப் பாடல்கள்
எதுவும் இனிமையாக ஒலிக்கவில்லை
தேநீர்க் கடைக்காரன் பகிரும்
இரவு மிஞ்சிய வெதுப்பக பண்டங்களுக்காக
வைத்த கண் வாங்காது
கண் கெழித்து காத்திருந்தன
அவன் வாடகை காலம் முடிந்ததும்
வாழ்வினை அள்ளி சாக்கில் அடைத்து
இரவோடு இரவாக
இடம் மாறிச் சென்றிருந்தான்
அவன்தான் இடம் மாறிச் செல்கிறான்
அவனது நினைவுகள்
இடப்பெயராமல் தேநீர்க்கடைப் பட்டறையில்
ஈக்களென மொய்த்திருந்தன
சங்கதி தெரியாமல் காத்திருக்கும்
தோட்டிப் பறவைகளின் அலகுகளில்
இன்னும் ஒட்டியிருக்கக் கூடும்
தேநீர்க் கடைக்காரனின் பேரன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவனின் இதழ்களில் ஊறிப் பெருக்கெடுக்கும் இனிப்பு

முன்பள்ளி வகுப்பறையினை
காற்றைக் கிழித்து வந்து திறந்து விடுகிறது
காதைத் தகர்க்கும் மணியோசை
முண்டியடித்துக் கொண்டோடி
சிற்றுண்டிச் சாலையினை
முற்றுகையிடுகிறார்கள் சிறுவர்கள்
மேசை மீது பல வர்ணங்களில்
பரப்பி இருக்கும் இனிப்புகள்
பட்டாம் பூச்சிகளின் கண்களை பறிக்கின்றன
எதைத் தெரிவு செய்வது
எதை விடுவதென்று திண்றாடுகிறான்
பத்து ரூபா குத்தியை வைத்திருக்கும் சிறுவன்
நெருக்கித் தள்ளும் மாணவர்களினதும்
முதலாளியின் நெருக்குதலிலும்
முழி பிதுங்கித் திமித்துப் போகிறான்
இறுதியில் கண்ணில் தென்படும்
ஒன்றை வாங்கிச் செல்கிறான்
இடையில் சக வகுப்பு நண்பன்
சுவைத்துச் செல்லும் மிட்டாயை கண்டதும்
வாயில் ஊறிப் பெருக்கெடுத்தது
விடுபட்ட அவனின் பிரியமான இனிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகள் வளர்ப்பவன்

பறவைகளைக் கூண்டுகளில்
சிறைப்படுத்தி வளர்ப்பவன்
முதலில் விரிந்து கிடக்கும்
அதன் எல்லையற்ற வானத்தை
கபளீகரம் செய்கிறான்
பின்னர் அதன் சுதந்திரத்தை
அடாத்தாகப் பறிக்கிறான்
அது தன் பூர்வீகத்தை நினைந்து
பறக்க எத்தனிக்கும் தருணங்களிலெல்லாம்
இறகுகளைக் கத்தரித்து விடுகிறான்
ஆனால் அவன் ஒரு போதும்
அறிந்திருக்கவில்லை
தன் வீட்டு முன்றலில்
மரங்கள் வளர்க்கும் பட்சத்தில்
அதன் சடைத்த கொப்புகளில்
யாருடைய அழைப்புகளுமின்றி
பறவைகள் சுயமாகவே
சபை கூடும் நிதர்சனத்தை
ஏனெனில் பறவைகளின் பூர்வீகமென்பது
ஆதியிலிருந்து மரங்களாகத்தானிருந்து வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்கள்

நின் கொப்பித் தாள்களில்
எழுத்துக்களை மண் புழுக்கள்போன்று
ஊர்ந்து செல்ல விட்டு ரசிக்கிறாய்
பின்னர் இரவு நேர
ராட்சத முலையூட்டிப் பறவைகள்போன்று
அதன் கோடுகளினிடை
தலைகீழாக தொங்கவிட்டுப் புதினம் காட்டுகிறாய்
எழுத்துக்களை கோர்த்து
சொற்களாக்குவதற்கிடையில்
பத்துப் பதினைந்து தடவைகள் அழித்தழித்து
அதனை திட்டமிட்டு கொலையும் செய்கிறாய்
முன் பள்ளி மாணவனே
இந்த எழுத்துக்கள் மீது
அப்படி என்னதான் தீராப் பகையோ
உன் பிடியிலிருந்து விடுபட்டு
சொற்களாக மாறிப் பறந்து செல்ல
கடைசிவரை போராடுகின்றன எழுத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேநீர்க் கோப்பையில்
## நிரம்பி வழியும் நிலவு

மொட்டை மாடி வெளியில்
கண் சிமிண்டும் விண்மீன்களை ரசித்தபடி
காற்றுவாக்கில் அமர்ந்திருக்கிறேன்
ஒரு கவிதைக்காக
தனித்திருக்கும் இன்னேரம்
எனக்காக தயாரித்து வைக்கப்பட்ட
தேநீர் கிடந்து ஆறுகிறது
அது தன் பாட்டில் நீந்தித் திரிந்த நிலவை
ஆர்ப்பாட்டமின்றி சிறை பிடித்தது
தேநீரை அருந்தினால்
நிலவு சிதைந்துவிடும் சாத்தியம் நிலவுகிறது
இருந்தும் சூடாறிய தேநீரை
ஒவ்வொரு மிரடாக சுவைத்தருந்துகிறேன்
அருந்தருந்த தன்னை புதுப்பித்தபடியே மிதந்தது
இப்போது மீதம் வைத்திருக்கும்
கடைசிச் சொட்டில் நிரம்பி வழிகிறது நிலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் பொருள்

குந்தியிருக்க சிறு அவகாசமின்றி
தேவைக்கதிகமாக வாழ்க்கையை
சம்பாதித்து அலுத்த மட்டில்
மேடும் பள்ளமுமான
எனது வாழ்வின் எல்லையை
ஒருவாறு அடைந்ததன்
பரபரப்பின் பின்னராக
அது கடந்து வந்த காலத்தின்
ஓய்விலாப் பேரலைச்சலின் சுவடுகளை
பெருமூச்சு விட்டபடி
ஒரு கணம் திரும்பிப் பார்க்கிறேன்
எதுவுமற்றிருந்தது
எனது வாழ்வின் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலராகிய பட்டாம் பூச்சி

செடியில் முகிழ்ந்திருப்பது
தனி மஞ்சள் வழியும் மலரென
பிரியப்பட்டு கொய்தாள் சிறுமி
கொய்த கணத்தினிடை
சிறுமியின் விரலிடை
படபடத்தது பட்டாம் பூச்சி
அதனை ரசிக்கவும் முடியாமல்
பறக்கவிடவும் முடியாமல்
தவிக்கிறது சிறுமியின் மனசு
விரலிடை சிக்கிய பட்டாம் பூச்சி
விரிந்து கிடக்கும் தனது வானத்திற்காக
அயராது சிறகடித்த வண்ணமே இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதுவும் நிகழலாம்

அடுத்து வரும் கணங்களுக்காக
என்னை தயார்படுத்திக் காத்துக் கிடக்கிறேன்
அங்கே என்ன நிகழப் போகிறதென்று
எதுவுமே தெரிந்திருக்க நியாயமில்லை
எல்லையற்ற பரவசம் மிகுந்த
மகிழ்ச்சியைத் தரக்கூடியதான
பேரானந்தம் நிகழலாம்
மனசை உலுக்கக் கூடிய தாங்கொணா
பெருந்துயரம் நடந்தேறலாம்
எஞ்சியிருக்கும் வாழ்வை
திருப்தியாகக் கொண்டு செல்வதற்கான
ஒரு அதிஷ்டம் காத்திருக்கலாம்
அதே கணம் இருக்கின்ற உதிரிகள்
சில சமயம் பறிபோய்
ஓட்டாண்டியாய் அலைந்தும் திரியலாம்
இப்படி எதுவும்
நிகழச் சாத்தியமிருக்கிறது
ஆயினும் துளிர்க்கும் கணங்களிடை
என்ன நிகழுமென்று எதுவுமே தெரியாது
இருந்தும் இதையெல்லாம்
கடந்தபடிதான் நாம் செல்கிறோம்
அல்லது காலம் நம்மை நிர்ப்பந்திக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றைத் திறந்துவிடும் மரங்கள்

இதமாக வருடிச் செல்லும்
காற்றின் பறத்தலை
எங்குமே காணவில்லை
இலையின் நுனியிலும் இல்லை
அதன் ஆதிக் குடியான
கடற்கரை வெளியிலும் இல்லை
புழுக்கம் தாங்கொணா மட்டில்
ஆழ்ந்து துயிலும் காற்றை
அரட்டி விட எத்தனிக்கிறேன்
மௌனம் சாதிக்கும் மரங்களின்
கிளைகளை உசுப்பினால்
அதன் உறக்கம் கலைந்து விடலாமென்று
பரிதாபப்படுகிறாள் ஹயா
இலைகளின் கீழாக
கொடுகிச் சுருண்டு படுக்கும் காற்றை
அப்படியே விட்டு விடுகிறேன்
சிறிது நேரம் சென்றதும்
காற்றைத் திறந்துவிட்டன மரங்கள்
அது பட்டாம் பூச்சியெனப் பறந்து
முதலில் ஹயாவைத்தான் தழுவிச் சென்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியத்தின் நிழல்

தனக்கு மிகவும் விருப்பமான
இரண்டு முயல்களை
ஓவியமாக வரைந்து தரும்படி
அவாவுறுகிறாள் ஹயா
கறுப்பு நிறத்தில் ஒன்றையும்
வெள்ளை நிறத்தில் மற்றதையுமென
கட்டளையும் போடுகிறாள்
எனக்கு ஓவியம் வரைவது
சற்றும் பரிச்சயமானதாக இருக்கவில்லை
இருந்தும் அவளது ஓயாத
நச்சரிப்பை சமாளிக்கவென
வெள்ளை நிறத்தில்
முயலொன்றினை முடிந்தளவு வரைந்து
ஹயாவிடம் கொடுக்கிறேன்
அவள் கறுப்பு முயலையும்
வரைந்து தரும்படி அடம் பிடிக்கிறாள்
ஓவியம் வரைந்த தாளில்
பகல் பொழுதினையும் வரைகிறேன்
இப்போது முயலின் நிழலைக் காட்டி
இதுதான் கறுத்த முயலென்றேன்
அவள் ஏற்றுக்கொண்டாள்
இருந்தும் இரவு வந்துவிட்டால்
நிழல் மறையும் சாத்தியமிருக்கிறது
உடன் ஒளியை உதிர்க்கவென
சில மின்மினிப் பூச்சிகளை
அங்குமிங்குமாக வரைந்து விடுகிறேன்
வரைந்த ஓவியத்தின்
நிழலின் நிறம் கறுப்பென்பதனால்
இனி எப்போதும் கறுப்பு வெள்ளையென
இரண்டு முயல்கள் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணங்கள் உதிர்க்கும் பறவைகள்

பிரியமான பறவை ஒன்றினை
ரசித்து வரைந்து கொண்டிருக்கும் இந்நேரம்
பறவையினைப் பிடிப்பதற்கான வலையினை
மிக அருகிலிருந்தபடி வேடன் ஒருத்தன்
கச்சிதமாக பின்னிக் கொண்டிருக்கலாம்
கொலைப் பசியில்
ஒரு ஊனுண்ணி விலங்கு கும்மிருட்டைக் கிழித்து
தனியாக அலைந்து கொண்டிருக்கலாம்
அச்சொட்டாகப் பறவையினை
வரைந்து பூரணமாக்கிய கணத்திணிடை
அது சுதந்திரமாகப் பறப்பதற்கான
வானத்தை வரைந்து முடிப்பதா
அன்றி அப்படியே விட்டுவிடுவதா
தூரிகை உதிர்க்கும்
ஒவ்வொரு துளி வர்ணங்களிலிருந்தும்
சிறகடித்தன பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையும் பொழுதினில்

நெடுங்கோடைக்குப் பின்னராக
கத்திக் கூச்சலிட்டபடி
பொடு பொடுக்கிறது பேய் மழை
சுருண்டு கிடந்த வீட்டுப் பீலி
நீர் வீழ்ச்சியென தன்னை உருமாற்றுகிறது
சிறுவர்கள் ஆடைகளைக் கழைந்தெறிந்து விட்டு
அதன் கீழ் சுதந்திரமாகக் குளித்து
முற்றமெங்கும் சிறு குளமென தேங்கி நின்றனர்
அவர்களின் எல்லையற்ற பரவசமும் அமளியும்
உம்மா சிறுமியாக இருந்த போதான ஞாபகங்களைத்
தூவானமாக மீட்டிக்கொண்டிருந்தன
சிறுவர்களைத் துரத்தும் சாக்கில்
உடன் வெளியில் சென்று
தனது ஆரண்யப் பராயத்து நினைவுகளை
மழையில் மனம் குளிர நனைந்து
மழையோடு மழையாகினாள்
மழையை யாருக்குத்தான் பிடிக்காது
என் உம்மா மட்டும்
வசந்த காலத்திற்கெதிராக குடை விரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைகளைத் திறந்துவிடும் கடல்

சிறியதும் பெரியதுமான அலைகளை
ஆதியிலிருந்து திறந்துவிடுகிறது கடல்
கடலிடம் சுமார் எத்தனை அலைகள் இருக்குமென
என்னிடம் அவாவினாள் ஹயா
அதனை அலைகளைத் திறந்துவிடும்
கடலிடம்தான் கேளென்றேன்
அதன் மொழி தெரியாதெனப் பிதுங்கினாள்
புதிது புதிதாக அலைகளை
அனுப்பிக் கொண்டே இருந்தது கடல்
உடன் அலைகளை எண்ணத் துவங்கினாள்
அது ஆர்ப்பரித்தபடி
ஓய்விலாது வருவதும் போவதுமாக இருந்தது
அலைகளை எண்ணுவதை நிறுத்திவிட்டு
அதன் வாலைப் பிடித்து
கரையின் கணுவில் கட்டிப் போடுகிறாள்
இப்போது அலையெதுவும்
கரைக்கு வருவதாகத் தெரியவில்லை
மௌனித்திருந்தது மாபெரும் கடல்
குதிரையென திமிறிக் கொண்டிருந்த
ஒரேயொரு அலையைத்தான் மீளவும் மீளவுமென
கடல் அனுப்பி பயம்காட்டி இருக்கிறதென்று
முடிவெடுத்தாள் ஹயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்புகள் எதற்கு

நான் விரும்பாத மிருகங்களின் பட்டியலில்
ஆதியிலிருந்து மான்தான்
முதன்மை வகித்து வருகிறது
அது உங்களுக்குப் பிடித்துப்போனமைக்கு
நிறைய நியாயங்களை முன்வைக்கலாம்
அதன் வசீகரமான விழிகளையும்
புள்ளி பூத்த செம்மஞ்சள் நிற மேனியையும்
ஏன் கிளைவிட்ட கொம்புகளையும்கூட
நீங்கள் சுட்டிக் காட்டலாம்
அதைப் பிடிக்காமல் போவதற்கு
என்னிடம் ஒரேயொரு காரணம்தான் இருக்கிறது
நெடுத்த கூர்மையான கொம்புகளை
தன் வசம் வைத்துக்கொண்டு
கொம்புகளற்ற மிருகங்களைக் கண்டு
அஞ்சி ஓடுவதும் இரையாகுவதுமே
உறையில் வாளை வைத்துக் கொண்டு
களத்தில் மண்டியிட்டு மடிபவனை
யாருக்குத்தான் பிடிக்கும்
கொம்புகள் எதற்கென்று புரியாமலே
அதனை வளர்க்கின்றன மான்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறிந்த சிறகுகள்

நான் சிறுமியாக இருந்தபோது
எனக்குப் பரிசாகத் தந்த
வானவில் பூத்திருந்த வானம்
இப்போதும் என் கண்ணெதிரே
அப்படியே விரிந்து கிடக்கிறது
அது எனது பறத்தலுக்காக
தன்னை அகலத் திறந்தபடி ஆவேசப்படுவதை
என்னால் உணர முடியாமலில்லை
சிறகுகளைக் கத்தரித்துவிட்டு
சுதந்திரமாகப் பறப்பதற்கான
எல்லாக் கதவுகளையும் அடைத்துவிட்டு
நீ இந்த வானத்தை
பரிசளித்ததன் சூட்சுமம்தான் என்ன
எனது முறிந்த சிறகுகளால்
எல்லையற்ற இவ்வெளியினை
எப்படிக் கடக்க முடியுமெனக் கருதுகிறாய்
நீ எண்ணுவது மாதிரி
சிறகுகளற்றதா பரபரப்பான வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை எழுதும் தருணங்கள்

இலையுதிர் காலம் முன்பாக
வசந்த காலம் பற்றிய பாடலையும்
பரிதி துயில் கலைந்தெழும் முன்பாக
இரவினது பாடலையும் எழுதி ரசிப்பது போன்று
சிறுவனாகித் தெறித்துத் திரிந்து
எரிச்சலூட்டும் முன்பாக
குழந்தைப் பராயம் பற்றிய பாடலையும்
வாலிபனாகிக் குட்டிச் சுவராகும் முன்பாக
சிறு பராயம் பற்றிய பாடலையும்
முதுமை முட்டி வேண்டாத ஒன்றாகி
முதியோர் இல்லத்தில் தூக்கியெறியும் முன்பாக
இளமைக் காலம் பற்றிய பாடலையும்
வாழ்ந்து சலித்து தெவிட்டும் முன்பாக
வாழ்க்கை பற்றிய பாடலையும்
எழுதித் தீர்ந்த பின் செத்துப் போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவிடம் பகிரப்படா சிறுமியின் சொற்கள்

காட்டு அரசன்போல் கர்ச்சிக்கும்
அப்பாவின் கடும் போக்கு
அம்மாவிற்கு பழகிப் போனாலும்
அவரது நடத்தைப் பிறழ்வுகளுடனான
தொடர்ச்சியான அதிகாரமிக்க மிரட்டல்கள்
சிறுமியாகிய எனக்குள்
அதீத பதபதப்பைத் தோற்றுவித்த
அதே தருணம் வெறுப்பையும் வளர்த்தது
அவரை எதிர்க்க நெஞ்சுரமற்றவளாகி
பயந்தொடுங்கி சுவர்ப் பல்லியாகிறேன்
எனது கண்களில் எப்போதும்
பீதி நிலவியபடியே இருக்கிறது
புள்ளப் பூச்சியாகி
அம்மாவின் முந்தானைப் புதரினுள்
அடிக்கடி ஒளிந்து கொள்கிறேன்
அப்பா மிக அருகிலிருந்தும்
தூரமாக இருப்பதாகவே உணர்கிறேன்
ஆயினும் எனது பெயருக்கு முன்னால்
அவருடைய பெயர் இருப்பதனால்
என்னுடைய அப்பாதானென்று
என்னால் உறுதிப்படுத்த முடிகிறது
அவரற்ற நிசப்தமான சூழலில்
அம்மாவினதும் எனதுமான கவலைகளை
பொம்மைகளிடம்தான் முறையிட்டு
மனதை ஆற்றுப் படுத்துகிறேன்
இருந்தும் அவரிடம் பகிரப்படாத
ஒரு அவணம் சொற்கள்
மனசினுள் தேங்கிக் கிடக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீச்சிடும் ஓவியம்

வீட்டின் பின் புறச் சுவரினில்
அழகிற்கென மரமொன்றை வரைந்து
அதன் கிளை மீது
பறவை ஒன்றினையும் வரைந்து விட்டேன்
நாளடைவில் அம்மரத்திலிருந்து
பறவைகள் கீச்சிடும்
சப்தம் கேட்கத் துவங்கியது
உடன் வெளியில் வந்து
ஓவியத்தை பார்க்கிறேன்
அதனைப் பறவைக் கூட்டங்கள்
ஆழ்ந்து ரசித்துக் கொண்டிருந்தன
அது கூடு கட்டுவதற்காக
தோதான இடம் பார்க்கிறதா
அன்றி வரையப்பட்டிருக்கும் பறவையை
தனது இணையாக்க முயற்சிக்கிறதா
எதனையும் சரியாக புரிந்து கொள்ள
பறவையின் மொழி தெரியவில்லை
ஓவியத்திலிருந்து பறவையின் ஓசைகள்
தினமும் ஒலித்த வண்ணமே இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருநாள் ஆடை

பிய்ந்த மேலாடையினை
முந்தானையினால் மறைத்தபடி
எனது மகவிற்கான
பெருநாள் ஆடையினை வாங்குகிறேன்
உலகின் நிறங்களையெல்லாம்
அவளுக்கு அணிந்து பார்க்க
பேராசைப்படும் அதே தருணம்
எனது சின்னச் சின்ன ஆசைகளையெல்லாம்
எங்கு சென்று ஆற்றிடல் தகும்
எனது கையறு நிலையுணர்ந்த மகவின்
கண்களிலிருந்து கசிகிறது உப்பாறு
உடன் வானவில்லை வரைந்து
எனக்கு ஆடையாக அணிவித்து
அழகு பார்த்து ரசிக்கிறாள்
மகவின் எல்லையற்ற அன்பினையுணர்ந்து
அவளை நெஞ்சோடணைத்து
உச்சி குளிர முத்தமிடுகிறேன்
இப்போது எங்களது மனசிற்குள்
மின்மினிப் பூச்சிகளென பறக்கிறது மத்தாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப் பிறையின்
## ஒளியினிடை மலரும் பெருநாள்

தலைப் பிறையின் ஒளியினிடை
பிரகாசமாய் மின்னுகிறது
ஹயாவின் பெருநாள் பற்றியதான கனவு
பெருநாளை கொண்டாடுவதில்
சிறுவர்களினிடை ஏற்படும் கிளர்த்தல்
ஹயாவிற்கு ஏற்படுவது ஆச்சரியமானதல்ல
அது தவிர்க்க முடியாத செயலுமாகும்
புதிதாய் வாங்கி வந்த ஆடைகளைப்
பிரித்துப் பார்ப்பதும் மடித்து வைப்பதுமாக
பேரீச்சம் பழத்தின் இனிப்பென கரைகிறது
அவளது நோன்பு காலங்கள்
உறவினர்கள் யாரேனும் வந்தால்
ஓடோடிச் சென்று பெருநாள் ஆடைகளை
ஒவ்வொன்றாக விரித்துக் காட்டுகையில்
அவள் மனசினுள் மத்தாப்பு சிரிக்கிறது
பெருநாளைக்கு முந்திய இரவை கடப்பதென்பது
அத்தனை இலகுவான காரியமல்ல
அதனை ஓர் ஆண்டு முடிவது போலுணர்கிறாள்
அவள் உள்ளங்கையிலிருந்த மருதாணிப் பிறை
திடீரென வானத்தில் துளிர்க்கையில்
ஹயாவின் மனசோடிச் சிவக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிந்து சென்ற வர்ணங்கள்

தனது வீட்டிற்கான பாதையினைத்
தவற விட்டுத் தடுமாறி நிற்கும் கபோதியை
அழைத்துச் செல்கிறேன்
செல்லும் சாலை மருங்குகளில்
இயற்கை சிந்தும் வெவ்வேறு வர்ணங்களை
கடந்து செல்ல நேரிடுகிறது
அவைகள் கபோதியின் கண்களிலிருந்து
இடை நடுவில் பிரிந்து சென்ற
நிறங்களாக இருக்க வேண்டும்
அவனை ஆவேசமாக பார்ப்பது
வர்ணங்களின் ஏக்கங்களில் தெரிகிறது
அதீத நிறங்களிலான இவ்வுலகினை
ரசிக்க முடியாமல் போனது அவனது துரதிஷ்டமே
அவன் கண்களிலிருந்து பிரிந்து சென்ற நிறங்கள்
என்னைப் பின் தொடர்ந்து வந்தன
அதனைக் கபோதியிடம்
எங்கணம் மீள ஒப்படைப்பதென்று புரியவில்லை
கவலையின் நிறங்கள்
எனது கண்களிருந்து கசியத் தொடங்கின
ஆயினும் கபோதியின் நினைவுகளில்
தூர்ந்திராமலிருக்கும் பழைய வர்ணங்கள்
அவனது உலகினை வரையாமலில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை

கோடைக் காலமொன்றில்
சாலை மருங்கினில்
வெயிலில் நனைந்தபடி செல்கிறேன்
மழையின் முதல் முத்தத்திற்காக
ஒவ்வொரு துளிரும்
கன்னத்தை விரித்தபடி ஏங்கித் தவித்தன
அதன் ஈரத்தில் நனைந்து தொப்பாக
ஒவ்வொரு பூச்சியும் ஆவேசப்படுகிறது
ஆக்காட்டிப் பறவைகள்
மழையின் சிந்தனையில் மூழ்கி
சிறகை மேகத்தில் அடித்துக்கொண்டன
மரங்களின் வேர்கள்
ஒரு அடை மழைக்காக பெருமூச்சு விடுவது
வரண்ட நிலத்தின் பிளவினில் தெரிந்தது
இக்காட்சிகளையெல்லாம் பார்த்தபடி
கடந்து போகிறேன்
ஒரு கணம் அவைகளும்
என்னை திரும்பிப் பார்த்தன
மழையை எப்படியாவது தரிசிக்கும்படி
இறைஞ்சுவதாக உணர முடிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுத்தும் வார்த்தைகள்

சீட்டுக் கட்டுகளென
கலைந்து கிடக்குறதென் மனசு
ஒரு புள்ளப் பூச்சியின் மனசையொத்த
என் மனசை உடைத்துவிட
என் ஆடையை விடவும்
நெருக்கமான உன்னால் எப்படி சாத்தியமாயிற்று
இதற்கு முன் சந்திக்கவே இல்லை
உன்னிடமிருந்து
இப்படியானதொரு அபாயகரமான வார்த்தையை
மிக இலகுவில் நொறுங்கக்கூடிய
என் மனசு கலையாமலிருக்க
என்னை ஆற்றுப்படுத்தி மீளவும் மீளவுமென
ஒழுங்குபடுத்தி பார்க்கிறேன்
பருத்தி மனையில் அரைபடும் பன்னென
உறுத்திக் கொண்டே இருக்கிறது
சில உதவாத வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாடலில் உறைந்திருக்கும் சொல்

நீங்கள் எண்ணுவதுபோன்று
எனது பாடலில் உறைந்திருக்கும் சொல்
வெறும் பிச்சியல்ல
அது மின்னலின் சக்திக்கு நிகரானது
பெரும் பெரும் சாம்ராஜ்யங்களை
ஆதி வரலாறுகளை
அப்படியே புரட்டிப்போடும் வலிமை மிக்கது
அது குரலற்றவர்களின் குரலாக ஓங்கியொலிக்கிறது
ஒடுக்கபட்ட இனத்திற்கு ஆதரவாகக் குமுறுகிறது
அநியாயக்காரர்களுக்கெதிராக கர்ஜிக்கிறது
தனித்து நின்று போராடும் நெஞ்சுரமும்
தீரா வேட்கையும் அதற்குண்டு
எனது சொல்லுக்குள்
ஓர் அலை ஆர்ப்பரிக்கிறது
ஒரு நதி ஓடிக்கொண்டிருக்கிறது
எரிமலையின் குழம்புகள் கொதிக்கின்றன
மேலும் எனது சொல்லுக்குள் இருளை வாசிக்கும்
மின்மினிப் பூச்சிகள் பறக்கின்றன
சிறுவர்களைக் கவரும் தட்டான்கள் சிறகடிக்கின்றன
அதீத வாசனை மிகு பூக்கள் மலர்கின்றன
உலகின் விடியலை வரவழைக்கும் பரிதியும்
எனது சொல்லினுள்ளிருந்துதான் எழுகிறது
உங்களுக்குச் சந்தேகமிருந்தால்
எனது சொல்லை உடைத்துப் பாருங்கள்
அது நாம் அவாவுறும் இருப்பின் சொல்
நமது வாழ்வின் சுதந்திரத்தை பாடும் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூழாங்கற்களில் மலரும் விடுதலை

ஒரேயொரு கூழாங்கல்தான்
எதிரியின் நெஞ்சை கிழிக்குமென்று
அவர்கள் திடமாக நம்புகிறார்கள்
அதே கூழாங்கல்லின்
குறிதவறா வீச்சிலிருந்துதான்
நமது பூர்வீக மண்ணை மீட்டெடுப்போமென்று
அவர்கள் வலுவாக நம்புகிறார்கள்
உயிரைத் துச்சமென நினைத்து
பீரங்கியின் முன்நின்று வீசும் கவணிலிருந்துதான்
நமது வாழ்வின் வசந்தம் மலருமென்று
அவர்கள் சத்தியமாக நம்புகிறார்கள்
அவர்கள் எத்தனை முறை வேண்டுமானாலும்
எதிரியைக் குறிவைத்து எறிந்திருக்கலாம்
ஆனால் அவர்களின் விடுதலையின் பாடலை
ஒரேயொரு கூழாங்கல்தான்
நிச்சயமாக எழுதப்போகிறது
ஏனெனில் நம்பிக்கையென்பது
அவர்களின் தளரா உள்ளங்களில்
கருவிலேயே விதைக்கப்பட்டிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிரறியாக் கனவு

என் படுக்கை அறையில்
சுருண்டு படுக்கிறது ஒரு கனவு
கண்கள் தூக்கம் தழுவும் வரை
வேட்டைப் பாம்பெனப் பதுங்கித் திரிகிறது
அது என் முடிக்குரிய கனவா
குழிபறிக்கும் சதியின் கனவா
அன்றி அர்த்தமற்ற கனவா
கனவின் புதிர் பற்றி
எதுவுமே கணித்துச் சொல்ல முடியவில்லை
சிலவேளை என் வம்சத்தை
வேரோடறுக்கும் கெட்ட கனவாகவும்
இருக்கலாம்
இந்தக் கனவிலிருந்து தப்பிக்க
தேநீர்க் கோப்பையோடு விழித்திருக்கிறேன்
விடிய விடிய கனவும் விழித்திருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரமற்ற வாழ்க்கை

ஒற்றைப் புல்லின் நுனியில்
கோடை காலத்துப் பனித் துளியென
முகிழ்ந்து கிடக்கிறேன்
திறந்து கிடக்கும் புல் வெளியின் காட்டினிடை
இந்நேரம் என்னைப் போன்று
நிறையப் பேர் முகிழ்ந்து கிடக்கக் கூடும்
அவர்களை அடையாளம் காண்பதோ
குசலம் விசாரித்து பேசித் தீர்ப்பதோ
அத்தனை சுலபமான காரியமல்ல
அதற்கான அவகாசமும் என் வசமில்லை
காலைப் பரிதியின்
சுள்ளென்ற ஒளிக் கீற்றுகளையும்
மூச்சிரைக்க அலைந்து திரியும்
கொம்பு முளைத்த காற்றையும் எதிர்த்து
உலகின் ஒட்டு மொத்த ஒளியினையும்
எனக்குள் குவித்து வைத்தபடி நிற்கிறேன்
நானும் என் மகவுகளும்
அதிகமதிகம் ரசித்து மகிழ்ந்த
ஒரு மஞ்சள் வர்ணப் பட்டாம் பூச்சி
அதன் கால் விரல்களினால்
கண் இமைக்கும் கணத்தினிடை
என்னை உதிர்த்துவிட்டுச் செல்கிறது
போராடிச் செப்பனிட்ட கனவுகள்
உடைந்து சிதறிப் போகையில்
எதிலுமே பற்றுதலற்றுப் போகிறது
மீண்டும் மீண்டும் முகிழ்வதும்
மீண்டும் மீண்டும் உதிர்வதுமென
எத்தனை போராட்டங்கள் மிக்கது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழம்புதல்

அந்தி துளிர்த்து
இருள் நெடுத்து வளர்கிறது
சாலை மரங்களைக் கடந்து
தனியாக நடந்து செல்கிறேன்
இலைகளை ஓய்விலாது
உசுப்பியவாறே இருந்தன மரங்கள்
அவை காற்றிடம்
குழைந்து குழைந்து பேசுகின்றனவா
தன்னைத் தரிசிக்கவரும் பறவைகளை
இலையசைத்து வரவேற்கின்றனவா
அன்றி என்னிடம்தான் புன்னகைக்கின்றனவா
குழம்பிப் போகிறேன்
இலைகளை உசுப்பியவாறே இருந்தன மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனம் சாதிக்கும் விதை

எனக்குள் ஒரு இலை
சிலிர்க்கிறது
எனக்குள் ஒரு கிளை
வளர்கிறது
எனக்குள் ஒரு மரம்
சடைக்கிறது
எனக்குள் ஒரு வனம்
துயில்கிறது
இருந்தும் நீங்கள் என்னை
குழி தோண்டிப் புதைக்கும் வரை
மௌனமாகவே இருப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹயாவின் காவல் பொம்மை

அடை மழை ஓய்ந்து
இதமான காற்றும் வீசுகிறது
மதிய வெயில் குளிர்ந்து
சுள்ளென்று பெய்கிறது
வெளியில் அலாதியாக சென்றுவர
ஹயாவை அழைக்கிறேன்
அவள் தனது பொம்மைகளை
தனியாக விட்டுவர மறுத்து
அவைகளைத் தனதிரு புயங்களில்போட்டு
யாரும் பறிக்க முடியாது இறுகணைத்து
மூஞ்சைத் திருப்பியபடி நிற்கிறாள்
கடலலைகளில் கால் நனைத்து
அதன் முற்ற வெளியில் பட்டம் விட்டு
மிகவும் விருப்பமான
மஞ்சள் வர்ண பலூன் வாங்கி ஊதி
ஆகாயத்தில் பறக்கவிட்டு
சிறுவர் பூங்காவில்
விளையாடித் திழைத்த பின்னராக
குளிர்களி வாங்கி
ஒழுகொழுகச் சுவைக்காலாமென
நாக்கூறச் சொல்கிறேன்
உடன் தனது காட்டு பொம்மைகளை
உறங்கவைத்து விட்டு
அவைகளுக்கு காவலாக
உருவத்தில் பெருதாகவிருந்த
கொம்பன் யானை
பொம்மையினை நிறுத்திவிட்டு
பட்டாம் பூச்சியென சிறகடித்துப் பறந்து வந்து
என் தோளில் அமர்கிறாள்
சிறியதாக தோற்றமளித்தாலும்
காட்டின் அரசன் சிங்கமென்பதனை
அறிந்திரா எனது ஹயாச் செல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச மொழி

பிரபஞ்சப் பொது மொழியென
சிரிப்பைக் கொண்டாடுகிறேன்
அதற்கு இனமென்றும்
நிறமென்றும் பிரிவினைகள் கிடையாது
அது எனது எல்லையற்ற சந்தோசத்தின்
சின்னமாகத் திகழ்கிறது
எனது குழந்தையின் கள்ளங் கபடமற்ற சிரிப்பினில்
இறைவனைத் தரிசிக்கிறேன்
சில நேரம் என்னைக் கடந்து செல்பவர்கள்
என் மீது வீசிச் செல்லும்
ஒரேயொரு புன்னகையில் காலம் முழுதுமாக
அடிமையெனக் கிடக்க நேரிடுகிறேன்
நான் சிரித்தபடி வாழ்ந்தாலும்
இருட்டின் குகைகளில் சிக்குண்டு
ஒரு துளி ஒளிக்காகப் போராடுகிறேன்
உதடுகளிலிருந்து சிந்துவதல்ல சிரிப்பு
அது மனசிற்குள்ளிருந்து
மொல்லெனப் பறக்கும் மின்மினிப் பூச்சி
எனது மனசின் கருக்கலில்
எப்போது பறக்கப் போகிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்

பொருத்தமான நிறங்கள் பூசப்படாததால்
சிதைவுற்றிருக்கிறது ஓவியம்
அது வரைந்து முடித்த காலத்திலிருந்து
கவனிப்பாரற்று தூசி படிந்தபடி
அறைச் சுவரில் தனிமையில் தொங்குகிறது
அதனைச் சுவர்ப் பல்லிகள்கூட
வியந்து ரசிப்பதாகத் தெரியவில்லை
இதை உணர்ந்த ஓவியம்
தன்னைச் சிதைத்த வன்ம நிறங்களை
வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிடுகிறது
வெளியேற்றப்பட்ட நிறங்கள்
ஓவியத்தினுள் திரும்பிச் செல்லும் வரை
தற்காலிகக் கோடுகளைத் தேடிப் புலம்பெயர்கிறது
இப்போது வர்ணங்களற்று
வெறிச்சோடிக் கிடக்கிறது
ஓவியத்தின் பூர்வீகக் கோடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரவென்பது

என் தனித்த அறையின்
திறந்து கிடக்கும் தன் இமைகளினூடே
தினமும் என் அனுமதியின்றி
நுழைகிறது காற்று
அது புத்தகங்களை புரட்டி
வழமைபோல் எதுவுமே வாசிக்காமல்
திரும்பிச் செல்கிறது
மீளவும் வந்து மேசைமீதிருந்த
பூச்சாடியைத் தட்டிவிட்டு ஒளிந்துகொள்கிறது
பின்னர் சொற்கள் பாரமேற்றி வைக்காத
தாள்களைப் பறக்க விடுகிறது
அடைக்கிலன் குருவியும் வந்து
தோதான இடம் பார்த்துச் செல்கின்றது
என் வீட்டுத் துடைப்பை கட்டையிலிருந்து
தும்புகளை உருவியெடுத்துக் கூடு கட்டுகிறது
நாளடைவில் முட்டையிட்டு
அடைகாத்துக் குஞ்சுகளும் பொரித்து
குடும்ப சகிதம் வாழ்கிறது
இதையெல்லாம் மௌனமாயிருந்து
வியந்து ரசிக்க முடிந்த என்னால்
என் அறையினுள் உத்தரவின்றி
மாந்தர்கள் யார் நுழைந்தாலும்
என்ன காரணமோ தெரியவில்லை
அதனைச் செமிக்க முடியவில்லைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனசின் இருளில்
## மின்மினிப் பூச்சிகளைப் பறக்கவிடுதல்

மரத்தின் கிளைகளில் அமர்ந்தபடி
தனக்கான பாதையினை
செப்பனிடுகின்றன பறவைகள்
வானவில்லின் நிறங்களினை
அணிந்து கொள்கின்றன பட்டாம் பூச்சிகள்
பனித்துளிகள் அமர்ந்து கொள்ள
இடம் கொடுக்கின்றன ஊசி இலைக் காடுகள்
குளிரில் கொடுகி விறைக்கும் மலைகளைப்
போர்த்தி விடுகின்றன மேகங்கள்
வாசல் வரை வந்த மழைக் குஞ்சுகளை
சம்பிரதாயத்திற்காவது
ஒரு முறையேனும் தேநீர் அருந்த அழைத்தாயா
மின்மினிப் பூச்சிகளுக்கு
இருள் கத்தைகளைப் பரிசளித்தாயா
கூடு கட்டத் தெரியாத குயில்களுக்கு
கட்டிடக் கலையினைக் கற்றுக் கொடுத்தாயா
உன் வனத்தின் வசந்த காலத்திற்கும்
இலையுதிர் காலத்திற்குமிடையில்
எத்தனை நதிகளை உருவாக்கினாய்
உன் மனசின் இருளினுள்
ஒரு மின்மினிப் பூச்சியையாவது பறக்கவிட்டாயா
வரலாற்றின் புத்தகத்தில்
எந்தப் பக்கத்தில்
உன் நிழலை வரையப்போகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூட்சுமங்கள்

வாழ்விற்கும் சாவிற்குமிடையிலான
சொற்ப காலங்களினிடை
நதியை வீட்டிற்கு அழைத்து வந்தோமோ
வானவில்லை அணிந்து கொண்டோமா
பட்டாம் பூச்சிக்குப் பண்ணை அமைத்தோமா
வரலாற்றைப் புரட்டிப் போட்டோமா
இப்படி எதனைத்தான் சாதித்தோம்
அரசனென்றும் அடிமையென்றும்
மாறி மாறி நிறைய வேசங்கள் தரித்தோம்
பளிங்கு மாளிகைகளிலும்
சேரிப்புறக் கூடாரங்களிலும்
ஆயுளைக் காய்ச்சினோம்
சருகுகள் மண்ணில் விழும் கணங்களில்
மீளவும் அதனை
இன்னுமொருத்தரிடம் பறி கொடுத்தோம்
எதுவும் நிரந்தரமற்ற இவ்வாழ்வினை
அபகரிப்பதும் பறிகொடுப்பதுமென
எவ்வளவு சூட்சுமங்களால்
பின்னப்பட்டது நமக்கான அற்ப காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபஞ்ச ஓவியம்

தனது நினைவுகளில் வளர்ந்து கொண்டிருக்கும்
வாப்பம்மாவின் ஓவியத்தை
சுவரில் வரையத் துவங்கினாள் ஹயா
நான் அதற்கான நிறங்களினையும்
தூரிகையினையும்
ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறேன்
ஓவியத்தை வரைந்து முடித்ததும்
என்னிடம் காண்பித்து
வாப்பம்மா போலிருக்கிறதாவெனக் கேட்டாள்
அச்சு அசப்பில்
வாப்பம்மா மாதிரி இல்லாவிட்டாலும்
உலகின் முதற்தர ஓவியம் இதுதானென்றேன்
வாப்பம்மாவை மீளவும் வீட்டிற்கு
அழைத்து வந்த பூரிப்பில்
பட்டாம் பூச்சியெனப் பறந்தாள் ஹயா
நீரிழப்பால் மரணித்துப்போன
உம்மாவின் நினைவுகள்
எனக்குள் சடைத்து வளர்ந்து காடாகின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுகும் இரவு

இரவின் தூரமென்பது
போதாமல் இருப்பதாக உணர்கிறேன்
சிலவேளை வாழ்வின் நெருக்கடி குறித்தான
அவகாசமின்மையினால்
இவ்வாறு உணரப்பட வாய்ப்பிருக்கிறது
ஓயாது மூச்சிரைக்க ஓடித் திரிந்த
பகலின் நினைவுகளைத் திறந்து பார்க்கும்
புத்தகமாக இருக்கிறது இரவு
பேரமைதி நிலவும் இந்நேரம்
பால் நிலவினை ரசிக்கவோ
குறையிலிருந்த கவிதையினை
எழுதி முடிக்கவோ முடியாமலிருக்கிறது
ஒவ்வொரு சொல்லாக
இரவினை வாசித்து முடிப்பதற்கிடையில்
விடிந்து விடுகிறது
குறுகியிருக்கும் இவ்விரவினை
நீளமாக்குவதற்கான யுக்தி தெரியவில்லை
இருந்தும் விடியாமலிருக்க
இரவினைப் பிடித்து ஒரு குடுவையில்
உடன் நிரப்பி விடுகிறேன்
ஆனால் எனக்கு முன்பாக எழுந்து
குடுவையினைத் திறந்து வெளியேறுகிறது
அதனுள் மறைந்திருந்த பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்கும் முத்தம்

முற்றத்துச் செடியில்
பூத்துக் குலுங்கும் மலரின் மீதமர்ந்து
தேனருந்துகிறது பட்டாம் பூச்சி
அதற்கு முத்தமொன்றை
பரிசளிப்பதற்காக
அதனருகில் செல்கிறது குழந்தை
குழந்தையின் எண்ணம் புரியாது
பயந்தொடுங்கி
கிழிந்து பறக்கிறது பட்டாம் பூச்சி
உடன் பறக்கும் முத்தமொன்றினை
கொடுத்துவிடுகிறது குழந்தை
அதனைப் பட்டாம் பூச்சி
பிடித்துக்கொண்டனவா இல்லையா
என்பதெல்லாம் குழந்தைக்கு தெரியாது
எப்படியோ பட்டாம் பூச்சிக்கு
முத்தம் கொடுத்து விட்டோமென்ற பூரிப்பில்
திரும்பி வருகிறது குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனித்துளிகள் ரசிப்பதற்கு மட்டுமானதல்ல

இலையின் நுனியில்
கண்ணாடி இழையெனத் தொங்குகிறேன்
அந்தரத்திலாடுவதை நினைந்து
கிலியுற்று நெஞ்சு காய்பவனல்ல நான்
அச்சிறு கணங்களைத் துச்சமெனக் கருதி
காற்றை எதிர்த்துப் போராடும்
போர்க் குணம் கொண்டவன்
மூச்சுத் திணறி உடைந்து சிதறும்
கடைசிக் கணம் வரை
உலகின் மொத்த ஒளியினையும்
எனக்குள் சுருட்டி வைத்திருக்கிறேன்
பனித்துளியென என்னை
ரசித்தபடி கடந்து செல்பவர்களே
உங்களில் எத்தனை பேர்
விட்டில் பூச்சியென
போராடிச் சாக முனைகிறீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூங்கில் காடு

நான் பெண்
நானொரு மூங்கில் காடு
எனக்குள்ளிருந்துதான்
பிரபஞ்ச நெருப்பின் முதல் பொரி பறந்தது
அதே கணம்
என் புல்லாங்குழலில் இருந்துதான்
இசையின் முதல் ஓசையும்
காற்றினிடை பரவியது
நீங்கள் என்னை நேசித்தால்
இசையைப் பிரசவித்து
உங்களை மெய் மறக்கச் செய்வேன்
தவிரவும் என்னை வன்புணர முனைந்தால்
கெஞ்சி காலில் விழமாட்டேன்
எனக்குள் வளர்ந்து கொண்டிருக்கும்
தீயினால் உங்களைப் பொசுக்கி விடுவேன்
ஏனெனில் நான் பெண்
நானொரு மூங்கில் காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம்

பிரபஞ்சத்தின் சிறந்த கண்டுபிடிப்பென
புத்தகங்களை உரத்துச் சொல்வேன்
ஆதியிலிருந்து வரலாறுகளைப்
புத்தகங்கள்தான் வாசித்துக் காட்டின
அவை எனது காலத்தின்
சரியான திசைகளை காட்டும்
ஒளியாக இயங்குகின்றன
புத்தகங்களை வாங்குவதற்காக
செலவிடும் பணங்கள்
எனது வாழ்வின் முதலீடாக இருக்கின்றன
புத்தகங்களற்ற எனது அறை
ஆன்மாவற்ற உடலென உணர்கிறேன்
இனிமையான சொற்களற்ற
எனது வாழ்க்கையினைப்
புத்தகங்கள்தான் நிவர்த்தி செய்கிறது
அதன் ஒவ்வொரு பக்கத்திலும்
மூழ்கிக் கிடக்கிறேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகுகளுடன் பிறந்தவள்

நீ திட்டமிட்டு எழுப்பியிருக்கும்
இந்தச் சிறை எனக்கானதல்ல
நான் மண்ணில் விழும்போதே
சிறகுகளை விரித்துக்கொண்டு ஜனித்தவள்
எனது எல்லையற்ற வானத்தை
யாராலும் கூண்டிலடைக்க முடியாது
இருட்டின் குகையில்
என்னைத் தள்ளிவிடப் பார்க்கிறாய்
பிரபஞ்சத்தின் எல்லா ஒளிகளாலும்
நிரம்பியிருப்பவள் நான்
கொங்கிறீற் அணை கட்டி
என்னைத் தேக்கி வைக்கப் பார்க்கிறாய்
அதனை தகர்த்துச் செல்லும் காட்டாறு
எனது குரலின் சப்தத்தை
நசுக்கிவிட முனைகிறாய்
புல்லாங்குழலினைப் பிரசவிக்கும்
மூங்கில் காடு நான்
கூரான கத்தி முனையில் எறும்பென நகர்ந்து
காலத்தை வெல்பவள் நான்
எனது இருப்பை
எனது சுயத்தைப் பறிக்க எத்தனிக்காதே
நானொரு பிரளயம்
நானொரு வரலாறு
நானொரு சகாப்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபஞ்சத்தின் ஒளியால் நிரம்பியிருப்பவன்

மின்மினிப் பூச்சிகளின் வனத்தை
எனக்குள் திறந்து விடுகிறேன்
உடன் ஆகாயமாக மாறி
விண் மீன்களை
எனக்குள் பூக்கச் செய்கிறேன்
பால் நிலவின் ஒளியை நெய்து
அதனை ஆடையாகத் தைத்து
அணிந்து கொள்கிறேன்
பரிதியின் ஒளியைக் குளிர்மையாக்கி
பின்னர் அதனை அருவியாக மாற்றி
என்னில் மட்டுமே விழச் செய்கிறேன்
இப்போது உலகின்
எல்லா ஒளிகளினாலும் நிரம்பி
பூரணமாகப் பிரகாசிப்பவன் நான்
இனி எனக்குள் எப்போதுமே இருளில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிராகரித்தலென்பது

மயிர்க் கொட்டிகளைக் கண்டு
அஞ்சியோடும் சிறுவர்களே
அதன் வெதுவெதுப்பான உடல்
சில வேளை
உங்களுக்கு அருவருப்பூட்டலாம்
சிலிர்த்த உரோமங்களுடன்
அது ஊர்ந்து செல்லும் முறைமை
உங்களை அச்சமூட்டலாம்
இருந்தும் அது தனக்குள்
பல வர்ணங்களைப்
பதுக்கி வைத்திருக்கிறது
பல ஓவியங்களை
வரைந்து வைத்திருக்கிறது
பெரு வெளியை அளந்து பார்க்கும்
தன் நம்பிக்கையின் இரண்டு சிறகுகளை
தனக்குள் சுருட்டி வைத்திருக்கிறது
ஆதலினால் எனதினிய சிறுவர்களே
நீங்கள் பிடித்து ரசித்து விளையாடும்
பட்டாம் பூச்சியின்
குழந்தைப் பராயத்தை நிராகரிக்காதீர்கள்
ஏனெனில் நிராகரித்தலென்பது
அத்தனை கொடுமையும் துயரும் மிகுந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகளைத் திறந்துவிடும் மரங்கள்

ஆதியிலிருந்து மரங்களிடம்தான்
தஞ்சம் கோருகின்றன பறவைகள்
அதிலொரு தேவதைப் பறவையையேனும்
சிறை பிடிக்க நினைத்ததில்லை மரங்கள்
தவிரவும் அதிகாலையிலேயே
பறவைகளை திறந்து விடுகிறது
ஆனால் நாம்தான்
அதன் எல்லையற்ற வானத்தைப் பறித்துக்
கூடுகளில் அடைத்து விடுகிறோம்
மரங்களின் இலைகளின்
இரண்டு பக்கங்களையும் வாசித்துப் பாருங்கள்
அனேகமாகப் பறவைகளின் குறிப்புகள்தான்
அதில் எழுதப்பட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சருகு

பெரு வெளியெங்கும்
அலை மோதித் திரிகிறது
ஆதி மரமொன்றின் சருகு
அது காடு மேடெல்லாம் அள்ளுண்டு
நொறுங்கிச் சிதறுண்ட போதும்
மயிரிழையில் தப்பித்து விடுகிறது
இறுதியில் தனித்து நிற்கும்
கிழடு தட்டிய மரமொன்றின் கொப்பினில்
ஆறுதலாக இளைப்பாறுகிறது
சில வேளை இம்மரமானது
அநாதரவற்ற அச்சருகின்
பாட்டனாகவோ பாட்டியாகவோ இருக்கலாம்
காற்றின் கரங்களிடை சிக்கி
விடுபட அயராது போராடும் சருகானது
வாழ்வின் மீதான தீரா வேட்கையினை
எழுதிச் செல்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழலை அழைத்துவரல்

ஒரு இலையின் நிழலற்று
கோடை வெயிலெனக் கொதிக்கிறது
வீட்டைத் தடவிச் செல்லும் சாலை
சிறுவர்கள் விளையாடவோ
எனது சைக்கிலைச் சாத்தி வைக்கவோ
ஒரு துண்டு நிழலும் இல்லை
எனது கிராமத்தின் நிழலை
தின்று முடித்திருந்தது கட்டிடக் காடுகள்
ஊரின் ஒதுக்குப் புறமாய்
தனித்து நிற்கும் மரத்திடம் சென்று
அதன் நிழலை இரவலாகக் கேட்கிறேன்
வழிப்போக்கர்கள் காலாறிச் செல்லவும்
கால் நடைகள் இளைப்பாறிச் செல்லவும்
எனக்கு நிழல் வேண்டுமென்று மறுத்துவிட்டது
மரங்களை நட்டு
நிழலை உண்டாக்க அவகாசமில்லை
அப்படி எரிக்கிறது வெயில்
உடன் வனத்திற்குச் சென்று
சடைத்த மரமொன்றின் நிழலை
அதன் விருப்பமின்றி அழைத்துவந்து
சாலையில் கட்டிப் போடுகிறேன்
இப்போது வீட்டின் சாலை முன்றலில்
பட்டாம் பூச்சிகளென
பறந்து திரிகிறார்கள் அயல் சிறுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்களைப் பரிசுத்தமாக்குதல்

சினிமாப் பாடல்களில்
விரசம் நிறைந்து பச்சையாகக் கிடக்கிறது
அனேகமான சொற்கள்
அது அதீத உணர்ச்சிகளையும்
இச்சைகளையும்
ஆடவர்களுக்குத் தூண்டி விடுகிறது
பருவப் பெண்களின் மானத்தை
துகிலுரித்து வன்மம் புரிகிறது
அந்நீல நிறச் சொற்களையே
மீளவும் மீளவுமென
கேட்க அவாவுறுகிறது
அவர்களின் சஞ்சலப்பட்ட மனம்
நிர்வாணமாய் கிடக்கும்
வெட்கமற்ற சொற்களுக்கு
எனது கவிதைகளால்
ஆடை நெய்து அணிவிக்கிறேன்
இப்போது
அவர்கள் ரசிக்கும் பாடல்களின்
இசைகளினிடை மிக ஒழுக்கமாகத் திரிகிறது
பரிசுத்தமான சொற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறைகளின் விடுதலை

வெளியில் செல்லும் அவசரத்தில்
வீட்டின் பிரதான வாயிலின் கதவினை
பூட்ட மறந்துவிட்டேன்
கதவு திறந்து கிடப்பதனை உணர்ந்த அறைகள்
இரவின் புதர்களில் பதுங்கியபடி
வெளியில் செல்வதும் வருவதுமாக இருந்தன
உடன் பிரதான கதவினை சாத்திவிட்டு
உட்சென்று பார்க்கிறேன்
இரண்டு அறைகளைக் காணவில்லை
அறைகள் திரும்பி வரும்வரை
கதவினைத் திறந்து வைத்தபடி
வாசற்படியில் காத்திருக்கிறேன்
பின்னிரவாகியும் வரவில்லை
வெளியில் சென்று பார்க்கிறேன்
நிலவை ரசித்தபடி
பேசிக் கொண்டிருந்தன அறைகள்
அரை நூற்றாண்டு கால
சிறை வாசத்திலிருந்து விடுதலையாகி
புது உலகில் சஞ்சரித்தன
அதன் புன்னகையினைப் பறிக்க மனமின்றி
எதுவும் பேசாமல் திரும்பி வந்துவிட்டேன்
இரண்டு அறைகளுமற்று
வெறிச்சோடிக் கிடந்தது எனது புராதன வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம் பூச்சி

தனது சிறகுகளில் வழிந்தொழுகும்
வர்ணங்களின் திரட்சியைப்
பெருமை பேசுகிறது பட்டாம் பூச்சிகள்
அதில் வரையப்பட்டிருக்கும்
சிக்கலான கோடுகளை
பிக்காசோவின் ஓவியமெனக் கதையளக்கிறது
உலகம் தன்னை மட்டுமே தெவிட்டாது
மீளவும் மீளவும்
திரும்பிப் பார்ப்பதாக உரத்துச் சொல்கிறது
ஆயினும் தன் குழந்தைப் பராயத்தைப் பார்த்து
சிறுவர்கள் பயந்தோடிய தருணங்களை
அது யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவுப் பிராணி

ஒரு இராட்சதப் பிராணியென
பனியில் கொடுகிச் சிலிர்த்து
ஊர்ந்து செல்கிறது இரவு
அது குறைந்த ஒளியுடன்
பகலைப் பிரசவிப்பதற்காக
வயிற்றைத் தள்ளித் திரிகிறது
விண்மீன்களும் அம்புலியும்
துயிலுறும் கணத்தினிடை
மிக இலகுவாகப் பகலை ஈனுகிறது
ஒரு வெண்ணிற முயல் குட்டியென
ஒளிக் கீற்றுகளை உதறியபடி
முகமலர்ந்து கிடக்கிறது பகல்
அதன் முதல் ஒளியை
முத்தமிட்ட இரட்டிப்பு மகிழ்ச்சியில்
கடைசி வானத்திற்கும்
அப்பால் செல்கிறது பறவைகள்
இரவுப் பிராணி பகலைப் பிரசவிப்பது
இது எத்தனையாவது முறையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவிடம் பேசுதல்

கலவரத்தின் பின்னரான
ஒரு நடு நிசியில்
மொட்டை மாடி வெளியில்
தனியாக விழித்திருக்கிறேன்
கண்டி ராஜ்யம் முழுவதும்
விசித்திரமான பேரமைதி நிலவுகிறது
எனது வணக்கஸ்தலங்களை
எனது கடைத் தொகுதிகளை
எனது புதல்வர்களைத் தீக்கிரையாக்கிய
இரவிடம் பேச வேண்டும் போலிருந்தது
ஆனால் அதன் மொழிதான்
எனக்குத் தெரியவில்லை
விண்மீன்களும்
பால் நிலவும்
மின்மினிப் பூச்சிகளும்
ஒரு ஏழையின் சிமினி விளக்குமாக
இரவை ஆழ்ந்து வாசித்துக் கொண்டிருந்தன
உடன் ஒளியாக மாறுகிறேன்
இரவின் பக்கங்களை
பயங்கரம் சூழ்ந்திருந்தது
அதனை பார்க்க மனமின்றி
ஒளியிலிருந்து வெளியேறுகிறேன்
இரவினைப் பரிசுத்தப்படுத்தியபடி
போதனை செய்துகொண்டிருந்தார் புத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவின் நீட்சி

வகுப்பு நண்பனை சந்திக்கவென
ஒரு பூச்செடியைப்போன்று
அவனது இருப்பிடம் தேடிச் செல்கிறேன்
அவன் வீட்டில் இல்லையென்பதனை
எல்லைக் கதவுக்கு
வெளியில் போடப்பட்டிருந்த பூட்டு
சொல்லிக் காட்டுகிறது
பகிர்ந்து கொள்வதற்காக
ஒரு அவணம் நினைவுகளை
மனசில் சுமந்தபடி
அவனுக்காகக் காத்து நிற்கிறேன்
அவனது வளர்ப்பு நாய்
என்னைக் கண்ட கணத்தினிடை
வாலை ஆட்டிக் கால்களை முகர்ந்து நின்றது
எனது வருகை பற்றியதான
ஓரிரு சொற்களைப்
பூட்டின் இதழ்களில் சொருகிவிட்டு
திரும்பி வருகிறேன்
எனக்குள் பெருக்கெடுக்கிறது
வகுப்பு நண்பனின்
ஆரண்யப் பராயத்துப் பசுமையான நினைவுகள்
ஒரு தசாப்த பிரிவின்
தொடர்ச்சியாகிறது இன்றைய பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் சிறு காடு

நீள் கோடை நிலவும் வனத்தினிடை
புற்பூண்டுகளற்ற வெளியில்
நின்று கொண்டிருக்கிறேன்
வேடனின் குறியிலிருந்து தவறிய
மானொன்று உயிரைப் பொத்திப் பிடித்தபடி
மூச்சிரைக்க ஓடி வருகிறது
அது தப்பித்துக்கொள்ள
தோதான புதர் தேடி
அங்குமிங்குமாக ஓடியோடிப் பதறுகிறது
கொதி மண்ணில் சிக்குண்டு
சுருளும் மண்புழுப் போலான
அதன் பதபதப்பை
என்னால் உணர முடிகிறது
உடன் சிறு பற்றையாக மாறுகிறேன்
தாமதியாது எனக்குள் வந்து
ஒளிந்து கொள்கிறது மான்
இப்போது நான் சிறு காடு
எனக்குள் மேய்கிறது மான்
பிறகு பட்டாம் பூச்சிகளும்
இதர பறவைகளும் பறந்து திரியலாம்
வேறு இலையுண்ணி விலங்குகள்
என்னைச் சாப்பிட்டாலும்
நான் மீளவும் மீளவுமாய்
சடைத்துக் கொண்டுதான் இருப்பேன்
காடாய் இருப்பதென்பது
எத்தனை பசுமையும் அழகுமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரக்கம்

சுவரில் மீன்களை
வரைந்து கொண்டிருக்கிறேன்
அதற்கான நதியை வரைவதற்கிடையில்
அவசர வேலை நிமித்தம்
வெளியே செல்லும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது
மீன்கள் நதியின்றி
மூச்சுத்திணறி செத்துவிடுமென்று அஞ்சி
பச்சாதாப்படுகிறாள் ஹயா
அதனை பார்த்து வாயூறும்
பூனையை முதலில் துரத்துகிறாள்
பின்னர் வரைந்த மீன்களின்
கோடுகளையும் நிறங்களையும்
உலர்வதற்கிடையில்
சிந்தாமல் தூரிகையால் அப்பி எடுக்கிறாள்
உடன் நீர் நிறைந்த பாத்திரத்தில்
தூரிகையை அலசுகிறாள்
பல வர்ணங்களில் மீன்கள்
சுழித்து நுரைத்தன
மீன்களின் உயிரை
சேகரம் செய்த மனத் திருப்தியில்
அது நதியில் சுழிக்கும்
அழகை மெய்மறந்து ரசிக்கிறாள் ஹயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவும் பன்றிகள்

ஆழ்ந்து ரசித்துத் திளைக்க
மனம் இடம் கொடுக்கா
அருவருப்புகள் மிகுந்தவை பன்றிகள்
அவ்வாறு பார்க்கச் சகிக்கொணா
பவ்வியைச் சாப்பிடும் பன்றிகள் சிலதினை
எனது கண்ணாடி நதியில் நீராட
விருந்தாளியாக அழைத்துப் பார்க்கிறேன்
அவைகள் பிணவாடையடிக்கும்
சகதியை விட்டும் வெளிவருவதாக இல்லை
சேறும் சுரியுமடர்ந்த அவ்விடத்தை
சொர்க்கமென கருதி வாழ்கின்றன
தெவிட்டா அதன் வாசனையை
முகர்ந்து பேரின்பமுறுகின்றன
அது அவைகளின் பிறவிக் குணமாக இருக்கலாம்
இருந்தும் எல்லாவற்றையும் மீறி
அவைகளை வலுக்கட்டாயமாக சாய்த்து வந்து
நதியில் நீராட வைத்து பரிசுத்தமாக்கி
குருத்து மணல் பரப்பில்
பண்ணை அமைத்து பராமரிக்கிறேன்
பசும் புல்வெளியில் மேயவிடுகிறேன்
சொகுசு மீந்த வாழ்வைப் பரிசளிக்கிறேன்
எது எப்படி இருந்தாலும்
அவைகளின் அதியுச்சக் கனவு
ஆதியிலிருந்து சகதியாகத்தான் இருக்கிறது
இந்தப் பன்றிகளைப்போல்
நம்மிடையும் சிலர் வசிக்கத்தான் செய்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலையென உதிரும் மனசு

தார்ச் சாலை மருங்கினில்
பாதிப் பகலில்
பேரூந்திற்காகக் காத்திருக்கிறேன்
என்னை இதமாக வருடியபடி
கடந்து செல்கிறது
இள மஞ்சள் நிறத்தில் சுடிதாரணிந்த
ஒரு பருவக் காற்று
அதன் கடைக்கண் பார்வை
சட்டென என்னை புரட்டிப்போடுகிறது
அச்சிறு கணத்தினிடை
என் மரத்தின்மீது
ஒரேயொரு புன்னகையைத்தான்
வீசிச் சென்றது
இப்போது ஒவ்வொரு இலையாக
உதிர்ந்து கொண்டிருக்கிறதென் மனசு
ஊருக்கான கடைசிப் பேரூந்தையும்
தவற விட்டபடி
செய்வதறியாது திகைத்து நிற்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலைப் பரிசளித்தல்

காலநிலை பெரும் குழப்பத்திலிருக்கிறது
கடற்கரைக்கு அழைத்துச் செல்லும்படி
என்னை வற்புறுத்துகிறாள் ஹயா
புரிதலற்ற அவளது அடம்பிடித்தலை
தவிர்க்க முடியாது நிராகரித்தேன்
எனது அரவணைப்பையும் மீறி
தரையில் விழுந்து புரண்டழுகையில்
அவள் கண்களில் பெருக்கெடுத்தது கடல்
அவளை ஆற்றுப் படுத்தவென
உடன் ஒரு கடலை வரைந்து
அவளுக்குப் பரிசளிக்கத் தயாரானேன்
முதலில் கடலை வரைந்து
அதன்மீது ஒரு படகையும் செலுத்தியபடி
குறையில் வைத்துள்ளேன்
அலையை வரைந்து முடித்தால்
அது ஹயாவை இழுத்துச் செல்லும்
பேரச்சத்தினால்
அதனை தவிர்த்து விட்டேன்
இப்போது வீட்டு முன்றலில்
ஒரு புரவியென துள்ளிக் குதித்தோடி
அலாதியாக விளையாடுகிறது கடல்
இருந்தும் அலைகளற்றிருப்பதனால்
கடலென ஏற்க மறுத்துவிட்டாள் ஹயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுநிசி வாலாட்டிகள்

ஊர் ஆழ்ந்துறங்கும் பாதி இரவினில்
வாலாட்டிகள் ஒருமித்து
இடைவிடாது குலைக்கத் துவங்கின
அதன் ஒருமித்த ஊளை
பெரும் பீதியையும்
கிலியையும் உண்டு பண்ணியது
இரவின் பேரமைதி குலைந்து
அரைத் தூக்கத்தில்
சாலையில் அலைந்து திரிந்தது ஊர்
வாலாட்டிகள் என்ன காரணத்திற்காக
கூடி நின்று
தொண்டை பிய்ய குலைக்கிறதோ
உடன் ஒரு வாலாட்டியாக மாறி
அவைகளைச் சந்தித்து உரையாடினேன்
அவைகள் ஒன்றையொன்று பார்த்து
பேந்தப் பேந்த விழித்து நின்றன
ஒரு வேளை முதல் வாலாட்டி
அதன் நிழலினை
பார்த்துப் பயந்தும் குலைத்திருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் தனிமையும்

பசும் புல்வெளியில்
நானும் தனிமையும் அருகருகில்
அலாதியாக அமர்ந்திருக்கிறோம்
எங்களுக்கிடையில்
பேசுவதற்கு சொற்களேதுமின்றி
நிலவுகிறது பேரமைதி
நான் எனது பாட்டிலும்
தனிமை அதன் பாட்டிலும்
இயற்கையை ரசித்தபடி
காற்றுவாக்கில் இருக்கிறோம்
இடையில் நுழைந்த பட்டாம் பூச்சி
எங்களது பேரமைதியைக்
குலைத்துவிட்டுச் செல்கிறது
அதன் பகட்டு நிறங்களும்
சிறகுகளில் வரையப்பட்டிருக்கும் ஓவியமும்
என் கவிதை மனசை உசுப்பி விடுகிறது
நான் தொடர்ந்திருக்க மனமின்றி
தனிமையை அவ்விடத்திலேயே விட்டு விட்டு
உடன் கிளம்பிச் செல்கிறேன்
இனி யாராவது வரும்வரைக்கும்
தனித்திருக்கும் தனிமைக்கு
புல்வெளி துணையாக இருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களற்ற வெளியைப் பாடுதல்

பூக்களற்ற வரண்ட வெளியில்
ரசிப்பதற்கு எதுவுமற்று
அமைதியாக நடந்து செல்கிறேன்
மிகத் தொலைவில்
ஒரு புணையல் பட்டாம் பூச்சிகள்
வழி தப்பி அலைவது தெரிகிறது
அது மிக நீண்ட நேரமாக
பூக்களைத் தேடி ஓய்விலாமல்
பறந்தலைந்த பின்னராக
எனதருகில் வருகிறது
அது பசியில் அல்லாடுவதை
என்னால் உணர முடியாமலில்லை
உடன் கற்பனையில்
ஒரு பூந்தோட்டமாக மாறி
பூத்துக் குலுங்குகிறேன்
என்னில் வந்தமர்ந்து
தனது தீராப் பசியைத் தெவிட்டும்வரை
ஆற்றிச் செல்கிறது
சில சமயம் வழிப்போக்கர்கள் நுழைந்து
என்னைப் பறித்துச்
செல்லலாமென அஞ்சுகிறேன்
மீளவும் கற்பைனையிலிருந்து
வெளியில் வந்து
வீட்டிற்குத் திரும்பிச் செல்கிறேன்
என்னை மொய்த்தபடி வருகிறது
ஒரு தொகைப் பட்டாம் பூச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொம்மைகள் வரைபவள்

பொம்மைகளின் ஊடாட்டமும்
வாசனைகளுமற்று
வெறிச்சோடிக் கிடக்கிறது வீடு
அதன் கெடுபிடிகளின்றி
தன்னந் தனிமையில் வாடுகிறாள் ஹயா
அவளது தனிமையைப் போக்கிட
நான் ஒரு முயலாக மாறி
துள்ளிக் குதித்தோடுகிறேன்
குரங்காக ஒப்பனை செய்து
குத்திக்கரணம் அடிக்கிறேன்
அவள் எதற்குமே மசியவில்லை
அவளது அறைச் சுவர்களுக்கு
கானகத்தின் நிறங்களை
அள்ளிப் பூசி விடுகிறேன்
உடன் சுவரெங்கும்
தனக்கு மிகவும் பிரியமான
பொம்மைகளை வரைகிறாள்
பின்னர் அயல் வீட்டு
நண்பர்களை அழைத்து வந்து
அதனோடு அலாதியாக
விளையாடிப் பொழுதைக் கழிக்கிறாள்
இப்போது குழந்தைகளின்
எல்லையற்ற பரவசமும்
இதழ் வழிந்த சிரிப்புமாகி
வீடு முழுவதும் விரவுகிறது பேரொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவினை மொழிதல்

ஆதியிலிருந்து இரவினடர்ந்த
புதர்களில்தான் அநேக தவறுகள்
நிகழ்ந்து வந்திருக்கிறது
சிலவேளை இடையுறா வன்மங்கள் நிகழ
அதன் நிறமும் பேரமைதியும்
உகந்ததாக இருந்திருக்கலாம்
குற்றம் புரிபவர்கள்
மிக இலகுவில் ஒளிந்து கொள்ளத்தக்கதாக
அதன் கறுப்புச் சுவர்
வசதியாக வாய்த்து விடுகிறது
அதற்காக இரவினை
ஒரு போதும் யாராலும் தகர்த்து விடவோ
மறைத்து வைக்கவோ முடியாது
இரவுக்கு மட்டும் பேசத் தெரிந்திருந்தால்
அது இந்நேரம்
அதீத குற்றங்களினை தடுத்திருக்கும்
அன்றி இனங்காட்டியிருக்கும்
அதன் மெல்லிய உடல் மீது
குருதியை உறைய விடுகிறீர்கள்
பிணங்ளை அடுக்கி வைக்கிறீர்கள்
மேலும் மேலும் வன்மங்களை புரிகிறீர்கள்
முறைகேடற்று புணர்வதற்கென்றே அநேக இரவுகளை
நிர்வாணப்படுத்தியிருக்கிறீர்கள்
இரவு ஒரு கரும் பறவை
அதன் இனிமையான பாடலை
நீங்கள் மெய்மறந்து கேட்கத் தவறிவிட்டீர்கள்
இரவு ஒரு அற்புதமான பிரதி
அதை நீங்கள் வாசித்து
அதன் பரவசத்தை உணரத் தவறிவிட்டீர்கள்
இரவு ஒரு அழகான ஓவியம்
அதை ஆழ்ந்து ரசித்து
அதில் ஒரு நிறமாக ஒழுகத் தவறிவிட்டீர்கள்
ஆயினும் இவ்விரவினை
நீங்கள் கடந்து செல்வதென்பது
அத்துணை சுலபமான காரியமல்ல
அது பீதியுடனும் பதட்டத்துடனுமே
உங்களைக் கடந்து செல்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம் பூச்சியின் வன்மம்

புல்லிதழின் நுனிகளில் தொங்கும்
பனித் துளிகளில்
ஒளிச் சரடுகள் குவிந்து
வைர மணிபோன்று மின்னுகிறது
கண்களை கூசவைத்தபடி
பிரகாசமாக ஒளிரும்
பனித் திவலையின் பேரழகினை
வியந்து ரசிக்கிறேன்
என் இனிய காலைப் பொழுதை
சிதைத்தபடியாக பனியின் துயிலினைக்
கலைத்துச் செல்கிறது
புல்வெளியைக் கடந்து செல்லும் பட்டாம் பூச்சிகள்
தனது கால் விரல் நகங்களால்
சிறு உறுத்தலுமின்றி பனிக் குடங்களை
உடைத்துச் செல்கையில்
அதுவும் ஏதோ ஒரு வகையில்
தன்னை அறியாமல் வன்மம் புரிகிறதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருத்தலில் தொலைதல்

உன் நினைவுகளின் நதியில்
உதிர்ந்த சருகென
அள்ளுண்டு செல்கிறேன்
இடைவிடாத ஆந்தையின் அலறலும்
தெரு நாய்களின்
புணர்தலுக்கான சண்டையும்
மிக அருகில் ஒலிக்கும் பழைய பாடல்களுமாக
எதுவுமே என்னைப் பராக்காக்கவில்லை
பதட்டத்துடன் நகர்ந்து செல்லும்
இந்த வரண்ட இரவின் கணங்களில்
இன்னும் கொஞ்சம் மீதமிருக்கிறது
திராட்சை பழச் சாற்றில்
ஊறவைத்தெடுத்த ஒரு தொகைச் சொற்களை
உன்னிடம் பகிர்வதற்காகச்
சேகரம் செய்து வைத்திருக்கிறேன்
உன் வருகையின் தாமதத்தால்
அது நிறம் மாறி
நீர்த்துப் போயிருக்கிறது
உனக்காக ஆவி பறக்கத்
தயாரித்து வைத்த தேநீர் கொதியடங்கி
குளிர்ந்திருக்கிறது
நான் தனிமையை
வெறித்துப் பார்த்தபடி இருக்கிறேன்
மெதுமெதுவாக மங்கி தூர்ந்து போகும்
இந்த இரவின் கருமையில்
நீ எந்தப் புள்ளியில் மறைந்திருக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களின் மனதிலாடும் விழுதுகள்

ஊரின் ஒதுக்குப் புறமாக
கவனிப்பாரற்றபடி தனித்து நிற்கிறது
வயது முதிர்ந்த ஆலமரம்
அதன் தடித்த விழுதுகள்
தரையில் விழுந்து
சர்ப்பமென ஊர்ந்து திரிகிறது
தனது தோள்களில் தொங்கி
ஊஞ்சலாடி மகிழ்ந்திட
குட்டி நட்டிகள் யாருமே வருவதில்லையென்று
மனம் வருந்திச் சொன்னது
நான் உடன் விழுதுகளின்
கரங்களைப் பற்றிப் பிடித்து
முன்பள்ளிக்கு அழைத்துச் செல்கிறேன்
சீருடை அணிந்த மாணவர்களை
சந்தித்த பரவசத்தின் கணத்தினிடை
தன்னை மீண்டும் ஒரு முறை
புதுப்பித்துக் கொண்டது
பின்னர் தனது கரங்களால்
அவர்களைத் தூக்கி அரவணைத்து
ஆகாயத்தில் பறக்க வைத்து
தனது பிறவிப் பயனை அடைந்தன விழுதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்களின் புத்தகம்

தனது நதியின் பூர்வீகக் கதையை
அதன் ஆதி வரலாற்றை
அமைதியாக வாசிக்கின்றன மீன்கள்
அவை கூழாங்கற்களில் இருந்தவாறு
மெய் மறந்து ஆழ்ந்து ரசித்து
ஒவ்வொரு பக்கமாகப் படிக்கின்றன
சக தோழமை நண்டுகள்
அதனை விளையாட அழைத்தும்
முற்றாக நிராகரிக்கின்றன
இடைக்கிடை தவளைகளின்
ஓயாத சப்தங்கள்
இடையூறு செய்து பராக்காக்குகின்றன
இருந்தும் நதியின் கடைசிப் பந்தியை
வாசித்து முடிப்பதற்கிடையில்
தீர்ந்து விடுகின்றன அநேக மீன்களின் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வைத் தனிமையிடம் பங்கிடுதல்

என்னிடம் வீடென்ற பெயரில்
ஒரு வீடு இருக்கிறது
அதில் எப்போதும்
இருள்தான் குடியிருக்கிறது
என்னிடம் அன்பென்ற பெயரில்
ஒரு வாலாட்டி வளர்கிறது
என்னிடம் எது இருந்தாலும்
எது இல்லாவிட்டாலும்
என் காலைச் சுற்றிச்சுற்றியே கிடக்கிறது
என்னிடம் வாழ்வென்ற பெயரில்
ஒரேயொரு வாழ்விருக்கிறது
ஆனால் திருப்தியாக வாழ்வதற்கு
சாத்தியமான எதுவுமே
என்னிடம் இல்லாமலிருக்கிறது
என் வீட்டைப் போன்று
என் வாழ்வும் இருளடர்ந்து இருப்பதனால்
அதனை யாருமே பங்கிட முன்வரவில்லை
ஆதலினால் மீதமுள்ள வாழ்வை
தனிமையிடம் பங்கிட்டுக்கொள்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்லாங்குழலால் பேசுபவள்

அயல் வீட்டுச் சிறுமியின்
தெவிட்டா இனிப்பு மீந்த மொழி
பிறவியிலிருந்து அறுந்திருக்கிறது
அவளுக்குள் இடையுறா நிலவும் மௌனம்
அதீத அர்த்தங்களை பேசுகின்றன
குட்டி தேவதையென முகிழ்ந்திருக்கையில்
உள்ளத்தைச் சாந்தப்படுத்துகிறாள்
அவள் இடைக்கிடை உதிர்த்தும்
கள்ளங் கபடமற்ற புன்னகை
மஞ்சள் நிறப் பூக்களென
மனசெங்கும் விரவிக் கிடக்கிறது
விழிகள் மூடி மூடி திறக்கையில்
ஆயிரமாயிரம் பட்டாம் பூச்சிகள்
எனக்குள் சிறகடித்துப் பறக்கின்றன
இன்னும் வானவில்லின் நிறங்கள்
கண்களில் விரிந்து ஒளி தகதகக்கிறது
அவளைக் கடந்து செல்லும் தருணமெல்லாம்
எனது குரலைப் பரிசளிக்க அவாவுகிறேன்
அது சாத்தியமற்றுப் போகையில்
சலிப்புற்றுடைந்து சிதறுகிறது மனம்
உடன் குயிலின் மொழியை
இரவலாக கேட்டுப் பார்க்கிறேன்
அது எனது மொழி புரியாமல்
அவ்விடத்திலிருந்து பறந்து செல்கிறது
முடிந்தளவு அன்பொழுகும் சொற்களை
பகிர்ந்தளித்து வருகிறேன்
துவக்கத்திலிருந்து இசையில் லயித்து
மூழ்கியவளாக இருந்ததனால்
புல்லாங்குழலினை கொடுத்துள்ளேன்
இனி அவள் அதனை வாசித்து
என்னோடு உரையாடுவாள்
இருந்தும் கடவுள் கொடுக்கவிருக்கும்
கற்கண்டு மொழிக்காக காத்திருக்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிர்க்க முடியாத விடுபடுதல்கள்

முன் பள்ளி விடுவதற்கான
சமிக்ஞை காற்றில் விரவிய கணங்களினிடை
பாதிப் பொழுது கூண்டினுள்
அடைபட்டுக் கிடந்த பறவைகளுக்கு
விடுதலை கிடைத்தது போன்று
வகுப்பறையிலிருந்தும் முண்டியடித்து
அலாதியாக பறந்து செல்கின்றனர் சிறுவர்கள்
அவ்வாறு செல்லும் அவசரத்தில்
ஓரிரு சொற்களை எழுதித் தீர்ப்பதற்கிடையில்
கூர் மழுங்கியதும் தீட்டித் தீட்டிப் பாதியான
புத்தம் புதிய பென்சில்கள்
கூர் மழுங்கா வர்ணத் தீட்டிகள்
தனக்கு தேவையற்றவைகளை
உடனுக்குடன் அழித்தொழித்த
பழையதும் புதியதுமான
பொம்மை அழிப்பான்கள்
விதம் விதமான வடிவங்களையும்
நிறங்களையுமுடைய தண்ணீர்க் குடுவைகள்
மற்றும் சாப்பாட்டுப் பெட்டிகள்
அத்தோடு எழுதியெழுதிக் கிழித்து
உறை களன்றுபோன அப்பியாசக் கொப்பிகள்
இலவசப் பாட நூல்களென
அவர்களின் வகுப்பறைகளில்
தினமும் விடுபட்டுக் கிடக்கின்றன
இவைகள் பட்டாம் பூச்சிகளால்
அழுதடம்பிடித்து வாங்கி பைகளில் நிரப்பி
சுமக்க முடியாதபடி கொணர்ந்தவைகளே
மீள எடுக்க அவகாசமின்றி
சிறுவர்கள் விரைந்து செல்கையில்
தவிர்க்க முடியாத விடுபடுவைகளாக
இருந்த போதிலும்
மறுநாள் பள்ளி செல்லும் போது
புதிது வாங்கிக் கேட்டுச் சிணுங்குகையில்
மனம் சலிப்புறுவதும்
தவிர்க்க முடியாததாகி விடுகிறதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய இலைகளால் துளிர்த்தல்

ஒவ்வொரு பக்கமாக
இலைகளை வாசிக்கத் துவங்குகிறேன்
எல்லா இலைகளுமே வாசிப்பதற்கு
மிகுந்த அலாதியானவைதான்
அதற்கு இரண்டு பக்கங்கள்
இருப்பதைப் போன்று
எனக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன
ஒரு பக்கத்தை மட்டுமே
மற்றமைகளுக்கு திறந்து காட்டுகிறேன்
அதனைத்தான் அவர்களும்
எனது நிஜமான பக்கமென்று நம்பி
வாசித்துத் திருப்தி அடைகிறார்கள்
ஆனால் மரங்களின் இலைகள் அவ்வாறானதல்ல
அது தனது இரண்டு பக்கத்தினையும்
எப்போதும் திறந்து வைத்திருக்கிறது
அனேமாக அதன் இரண்டு பக்கங்களிலுமாக
பசுமையின் குறிப்புகள்தான்
ஆதியிலிருந்து எழுதப்பட்டு வருகின்றன
இந்த இலைகளாக நாமும் இருந்தால்
இங்கு எப்போதுமே அமைதி நிலவலாம்
ஒவ்வொரு இலையாக வாசித்து முடித்தபோது
புதிய இலைகளால் துளிர்த்து சடைத்து
நிழல் கொள்கிறது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாளில் வரையப்பட்ட கனவு

குடிசையில் வசித்து வரும்
சேரிப்புறத்துச் சிறுமியாகிய எனக்குள்
எப்போதும் ஒரு கனவு வளர்ந்து வருகிறது
அது கல் வீடுபற்றியதாக மட்டுமே இருக்கிறது
இது எல்லாக் குடிசை வாசிகளுக்குமுரிய
நியாயமான கனவுதான்
எனது கனவினை உடன் நிர்மாணிப்பது
அத்தனை இலகுவான காரியமல்ல
தினசரி பொழுதைக் கடந்து செல்வதே
பெரும் போராட்டமாக இருக்கும் போது
இது எங்கணம் சாத்தியமாகும்
அப்பா கொத்தனாராக இருந்து
நிறைய கல் வீடுகளை
கட்டி முடித்து கல்லாய்ப் போனார்
ஆனால் எமக்கென்று
இன்னும் ஒரு செங்கல்லையேனும்
அவரால் வாங்க முடியவில்லை
ஒவ்வொரு கல்லாகச் சேகரம் செய்திருந்தால்
இந்நேரம் வீட்டை கட்டி முடித்திருக்கலாமென
இடைக்கிடை புலம்பி
மனதை ஆற்றுப்படுத்துகிறாள் அம்மா
எனது கனவு மாளிகையினை
சித்திரத்தில் வரைந்து
அதனைத் தினமும் ரசிக்கிறேன்
இரவு பெய்த அடை மழையின் தாரைகள்
கூரையின் கிடுகினூடாக நுழைந்து
தாளில் வரைந்து வைத்திருந்த
எனது மாளிகையினை
அப்படியே அடித்துச் செல்ல முனைகையில்
அதனைக் காப்பாற்றிப் புத்தக இடுக்கினுள்
பவுத்திரமாக வைத்திருக்கிறேன்
இருந்தும் இன்னும் எத்தனை காலங்களுக்கு
எனது கல் வீடுபற்றியதான கனவு
தாளில் வரையப்பட்ட சித்திரமாக இருக்கும்
யாரோ ஒருத்தரின் வீட்டைக் கட்ட
அதிகாலையிலேயே புறப்படுகிறார் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வை சமாளிக்கும் முத்தங்கள்

தூக்கலான வாசனை மீந்த
முத்தங்கள் சூழ்ந்தது பரபரப்பான வாழ்க்கை
அது நமக்குள் துளிர்விடும்
சிறியதும் பெரியதுமான முரண்களை
உடன் சமாளித்து சீர் செய்கிறது
தலைவனுக்கும் தலைவிக்குமிடையில் நிகழும்
விரிசல்களின் மௌனங்களை
அனேக தருணங்களில்
அதுதான் திறந்து தீர்த்து வைக்கிறது
முத்தங்களின்றி அன்பினை
வெளிக்காட்டுதலென்பதும்
வாழ்வினைக் கடந்து செல்வதென்பதும்
அத்துனை சுலபமான காரியமல்ல
ஒரேயொரு முத்தத்திற்காக ஆயுள் முழுவதும்
காத்திருக்க வேண்டி நேரிடுகிறது
திராட்சைப் பழச்சாறென
இனிமையானதும் தெவிட்டாததுமானது
முத்தங்களின் சுவை
அதனை பரிமாறும் முறைமையினை
முதன் முதலாக குழந்தைகளுக்கு
உம்மாதான் கற்பித்துக் கொடுக்கிறாள்
அவ்வாறு கற்றுக் கொண்டதன் பின்னர்
தங்களது முதல் முத்தத்தினை
பொம்மைகளுக்கு பரிசளிக்கிறது குழந்தைகள்
இவ்வாறு வழங்கப்படும்
இதமான முத்தங்களின் ஸ்பரிசத்தினை
யார்தான் நிராகரிப்பார்கள்
உடைந்து சிதறிய பேரன்பினை
மீளவும் செப்பனிடும் மாய வித்தையினை
தனக்குள்ளே பதுக்கி வைத்திருக்கிறது
பரிசுத்தமான முத்தங்கள்
எல்லையற்ற பிரியங்களின் உச்சத்தினை
முத்தங்களின்றி வேறெப்படி
வெளிக்காட்ட முடியுமென கருதுகிறீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைக்குள் குடை

வீட்டுக் கூரை வழியாக
திண்ணையில் இறங்குகிறது
மழைக் குஞ்சுகள்
அவைகள் அமர்வதற்காக
உறங்கிக் கிடந்த பாத்திரங்களை
உடன் திறந்து வைக்கிறேன்
கூதலில் கொடுகியபடி
எனது மடியில் சுருண்டு படுக்க
காலை சுற்றுகிறது வளர்ப்புப் பூனை
வீடு நனைந்து தொப்பாகியிருக்கும்
நெருக்கடி மீந்த தருணத்தில்
பொம்மைகள் வரையப்பட்டிருக்கும்
குடை வாங்கிக் கேட்டு
சிணுங்குகிறது குழந்தை
தினசரி வாழ்வே குடையின்றி
காய்ந்துலர்வதை அவளுக்கு
எங்கணம் விபரித்துச் சொல்வேன்
அவளது பராக்கைத் திருப்ப
மழையை ரசிக்கும்படி சொல்கிறேன்
அதன் தாரைகள் மீட்கும் இசையினை
கூர்ந்து செவிமடுக்கச் சொல்கிறேன்
முன்றலில் குவிந்து கிடக்கும்
சிறு பொய்கையில்
காகிதப் படகு செய்துவிடச் சொல்கிறேன்
இன்னும் கால் நனைத்து
விளையாடவும் சொல்லிப் பார்க்கிறேன்
எதற்கும் மசிவதாகத் தெரியவில்லை
குடை கேட்டு நச்சரித்தவாறே
மழையென அழுதது குழந்தை
மழை பெய்து ஓய்ந்து பின்னராக
குடையினை வாங்கிக் கொடுக்கிறேன்
மீண்டும் மழை வேண்டிப் பிரார்த்தித்தது
மலக் கிடங்கு நிரம்பிய சேதிபற்றி
எதுவுமே அறிந்திராக் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமியின் இனிப்பை தின்று முடித்த காற்று

புதிதாக வாங்கி வந்து
அறைச் சுவரில் மாட்டி விட்டிருக்கும்
ஓவியத்தில் வரையப்படிருந்த குழந்தை
ஒழுகொழுக ஐஸ்பழம் சுவைக்கிறது
அதனை பார்த்த கணத்தினிடை
ஹயாவும் வாயூறத் துவங்குகிறாள்
ஓவியத்திலிருந்து சிந்தும் துளிகளை
தொட்டு நாவில் வைக்கிறாள்
அது என்ன பழமென்று கேட்டு
பாசாங்கு செய்கிறாள்
இதற்கு முன்னர் ஒரு நாளும்
தின்னாததைப் போன்று
சுவை மிகுந்ததாக இருக்குமா
இது எங்கு வாங்கலாமென்று
என் தலையில் ஐஸ் வைக்கிறாள்
பின்னர் தனக்கும் வேண்டுமென்று
சிணுங்கி மாய்கிறாள்
பனி பொழியும் முன்னிரவில்
அவளை அழைத்துக் கொண்டு
கடற்கரைக்குச் செல்கிறேன்
தலை விரித்துப் போட்டு
பேயாட்டம் ஆடுகின்றன மரங்கள்
காற்று தனது கொம்புகளால்
ஆடைகளைக் கொழுகி இழுக்கிறது
தாமதியாது நானும் அவளுமாக
ஐஸ்பழம் வாங்கிச் சாப்பிடுகிறோம்
சுவையில்லையென்று சொல்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து ஒழுகுவதுபற்றி மட்டுமே
பெரும் கவலை கொள்கிறாள் ஹயா
அவள் ஐஸ் பழத்தைத் தின்று
தீர்ப்பதற்கிடையில்
மீதம் வைக்காமல் தின்று முடித்தது காற்று
உடன் காற்றைத் திட்டித் தீர்த்தபடி
இன்னுமொரு பழம் வேண்டுமென்று
அவ்விடத்தை விட்டு நகராமல் நின்றாள்
காற்றும் உறங்குவதாக இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்சள் பூக்களில் மலரும் சிறுமியின் அன்றாட வாழ்வு

பனி பொழியும் மூன்றாம் சாமம்
கூதலில் கொடுகி விறைத்தபடி
பேரூந்திற்காக தரிப்பிடத்தில் நிற்கிறேன்
வாலாட்டிகளுக்கிடையில் மூளும்
புணர்தலுக்கான ஓயாத சண்டையும்
ஆந்தையின் அலறலும் பீதியுறச் செய்கிறது
இராட்சத சர்ப்பமென ஊர்ந்து செல்லும்
தார்ச்சாலை மருங்கினில்
அணியணியாக நெடுத்து நிற்கும்
பெயரறியா மரங்கள் உதிர்க்கும்
மஞ்சள் பூக்களின் மீந்த வாசனை
மூக்கைத் துளைக்கிறது
பனிக் காற்றில் திரண்டு வரும்
வாசனையினை நுகர்ந்தபடி
சிறிது நேரம் தாமதித்துச் செல்ல
அவாவுகிறது மனம்
சாலை தோறும் விரவிக் கிடக்கும் பூக்களை
விரைந்து செல்லும் வாகனங்களின்
சில்லுகளில் நசிபடுவதற்கிடையில்
விரைவாக சேகரம் செய்ய
கிடந்து போராடுகிறாள் சிறுமி
கண்களைப் பறிக்கும் அதன் நிறம் மீதோ
தூக்கலான வாசனை மீதோ
அவளுக்கு எந்த ரசனையும் கிடையாது
அதனை விற்று தனதன்றாட வாழ்வினை
மலர்ந்திடச் செய்யவே
சுடும் குளிரையும் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் கூடையுடன் நிற்கிறாள்
நான் பேருந்திலேறிச் செல்கிறேன்
உதிர்ந்த எல்லாப் பூக்களையும்
ஒன்றும் விடாது சேகரம் செய்தாளா
அன்றி வாகனங்களில் சில்லுகளில் நசிபட்டு
சாலையோடு சாலையாகியிருக்குமா
அவளது ரொட்டித் துண்டும்
காலைத் தேநீரும் கை நழுவிச் சென்றிருக்குமா
கிடந்து பதறுகிறது ஈரமான மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"என்னிடம்
அன்பென்ற பெயரில்
ஒரு வாலாட்டி வளர்கிறது
என்னிடம்
வாழ்வென்ற பெயரில்
ஒரேயொரு வாழ்விருக்கிறது"

ஜமீலின் இந்த வார்த்தைகளில் இருக்கின்ற அன்புணர்ச்சி பரிபூரண தவிப்பிலிருந்து நிரந்தரமற்றதும் தடுமாற்றங்களுடையதுமான வாழ்விலிருந்து தோன்றுகின்ற சொற்களாகும்.

ஜமீலின் நம்பிக்கைகள் ஈரமலர்களைப்போல் வெயிலில் காய்கின்றன. கனவுகள் உடைந்துவிடும் நீர்க்குமிழியில் பிரதிபலிக்கும் நிறத்தீற்றல்களாக அலைகின்றன. அவருக்குள் ஊற்றெடுக்கும் குழந்தையின் பரிசுத்தமானது வளர்ப்பு நாயின் கண்களைப்போல குழந்தைகளைப் பாதுகாக்கும் பாசத்தின் காவலாக உற்று நோக்கியபடியே இருக்கின்றன. இவ்விதம் தொகுப்பு முழுக்க கருணையின் நீர்மை ஊறிக்கிடக்கிறது. வாழ்வை அழகுபடுத்தும் மாயத் தூரிகை அவருடைய மொழியாகும்.

**- அனார்**

LKR 350

எதிர் பிரதிகள்

9 789557 181028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org